215051

செந்தமிழ்

தொகுதி XXXIII June-July 1936

230

SL
N36.338
215051

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௩.] தாது௵ ஆனிமீ [பகுதி-அ.
Vol. XXXIII. June-July 1936. No. 8.

## உள்ளுறை.

நியாயப்பிரவேசமணிமேகலை:—பத்திராசிரியர். ௧௬௭—௨0௮

பாண்டியர்வரலாறு:-ஸ்ரீமத் T. V. சதாசிவபண்டாரத்தார் ௨0௯—௨௧௨

திருவள்ளுவர்காலம்:—ஸ்ரீமத். R. நரஸிம்ஹன் B.A. (Hons.) ௨௧௩—௨௨0

ராமலிங்கக்கோவை:- (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ. வே. சாமிநாதையர். 89—96

ஆடிக்கொடுத்தநாய்ச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும்:— } ஸ்ரீமத். செ. அப்புவையங்கார். 41-48

குருகைமான்மியம்:—T. K. இராமாநுஜையங்கார். 337—344

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு:—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷசந்தா ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and
.u. Narayana Iyengar at the Tamil Sangam Power Press,
No. 54, New Jail Road, Madura.

21505

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம் | 6 | 0 | 0 |
| * | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| *9. | அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

| | | |
|---|---|---|
| தொகுதி-௩௩] | தாது௵ ஆனிமீ | [பகுதி-௮. |
| Vol. XXXIII. | June-July 1936. | No. 8. |


## நியாயப்பிரவேச மணிமேகலை.

[௩௮௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### (2) அசன்னு.

இனி, ‘அசன்னு’ என்னும் திருட்டாந்தப்போலி, திருட்டாந்தப்பொருள் இலதாதல்பற்றி வருவது; திருஷ்டாந்தப்பொருள் இல்லதாகவே அதற்கு உறுப்பாயிருக்கவேண்டிய சாதன சாத்திய தன்மங்களும் இல்லனவாய்முடிதலால் அதில் தனித்தனி சாத்திய சாதன தன்ம விகலப் பகுப்பின்றியே உபயதன்மவிகலமொன்றே கொள்ளப்பட்டிருக்கிறது.

அது நியாயப்பிரவேசத்துள்ள ‘உபயாசித்தம்’ என்னும் திருட்டாந்தப்போலியுள் ‘அசன்னு’ என்னும் பெயரால் வழங்கப்பட்டது. அவித்யமாநோபயாசித்தமென்பதும் இது. அது வருமாறு:—

‘ஆகாஶவதி த்ருவித்வ்ரோ நாஸ்யாவிஜ: ।
தடிவஸகவாதி நம்வ்ருத்தி.’

என்பது.

இதன்பொருள்:—இன்மையின் உபயாசித்தமாவது ‘ஆகாசம் இல்லை’ என்பானை நோக்கி ‘ஆகாசம்போலும்’ என்பது.

இதுவும், முன்னதுபோலவே, பக்ஷ சாத்திய ஏதுவசனங்களும் வியாத்திவாசகமும் விளக்கவுரையும் வரையப்படாமல், திருஷ்டாந்தவசனம் மட்டும் (ஆகாஶவத்) 'ஆகாசம்போலும்' என்றெழுதப்பட்டிருக்கிறது. இவ்வுதாரணத்துக்குரிய பிறவுறுப்புக்களெல்லாம் அவரவர் வேண்டியவாறே படைத்துக்கொள்ளக்கூடும் என்பது இந்நூலாசிரியர் துணிபுபோலும். அவை குறிப்பால் அங்ஙனம் படைத்துக்கொள்ளக்கூடுமாயினும், அவற்றைக் கூற்றாற் சொல்லாதுவிடுதல் முறைபிறழ்தலும் குன்றக்கூறலுமாம்.

மணிமேகலையுள் இவ்வாறு கூறாமல் முன்பு சொல்லிவந்த முறையே இலக்கணமும் பக்ஷ சாத்திய சாதன வசனங்களும் வியாத்திவாசகமும் வெளிப்படக்கூறித் திருட்டாந்தங்காட்டி விளக்கப்படுகிறது.

அவித்யமான உபயாசித்தம் என்ற இது, மணிமேகலையுள் அசன்னுயுள்ள வுபயதன்மவிகல மெனப்படும். அது வருமாறு:—

"அசன்னு யுள்ள வுபயதன்ம விகலம்
இல்லாப் பொருட்கட் சாத்திய சாதன
மென்னு மிரண்டுங் குறையக் காட்டுதல்
சத்த மநித்த மூர்த்த மாதலான்
யாதொன்றி யாதொன்று மூர்த்தம தநித்தம்
ஆகா சம்போ லெனுந்திட் டாந்தத்துச்
சாத்திய தன்மமா யுள்ள வநித்தமுஞ்
சாதன தன்மமா யுள்ள மூர்த்தமும்
இரண்டுமா காசம் அசத்தென் பானுக்கு
அதன்க ணின்மை யானே குறையும்
உண்டென் பானுக் காகாச நித்த
வமூர்த்த மாதலால் அவனுக்குங் குறையும்" (௩௭௪—அ௫)

என்பது.

இதனுள், 'அசன்னுயுள்ள வுபயதன்மவிகலம், இல்லாப் பொருட்கட் சாத்திய சாதன, மென்னு மிரண்டுங் குறையக் காட்டுதல்' (௩௭௪-௭௬) என்றது இலக்கணம். [இது நியாயப்பிரவேசத்தில் இல்லை.]



இதன்பொருள்:-'அசன்னு என்று சொல்லப்பட்ட உபயதன்மவிகலம் என்னும் திருட்டாந்தப்போலியின் இலக்கணமாவது: எதிரிக்கு உடன்பாடில்லாததொருபொருளில் சாத்திய சாதனங்கள் எனத் தான் சொல்லும் அவையிரண்டுபொருளு மில்லாதிருக்கச் செய்தே அவ்வுடன்பாடில்லாத பொருளை வாதி தன் றுணிபொருட் பேற்றுக்குத் திருட்டாந்தமாகக்காட்டுதல்' என்றவாறு.

இல்லாப்பொருள் என வாளாகூறியவதனால், வாதிக்கேனும் எதிரிக்கேனும் அவ்விருவர்க்குமேனும் உடன்பாடில்லாதபொருளென்பது பெறப்பட்டது.

திருட்டாந்தப்பொருள் இல்லாமற்போகவே அதன்கண் உளவாகச்சொல்லப்பட்ட சாத்திய சாதனங்களும் இல்லனவாம்; ஆதலால் அவை சொன்மாத்திரையேயென்பதுதோன்ற, 'என்னும்' என்றும், 'குறையக்காட்டுதல்' என்றும் கூறப்பட்டது.

இனி, இதன் உதாரணம் வருமாறு:—

"சத்தம் அநித்தம் மூர்த்த மாதலால்
யாதொன்றி யாதொன்று மூர்த்தம் அது அநித்தம்
ஆகாசம்போல்" (௩௭௭—௭௯)

என்பது.

இதனுள், சத்தம் பக்கப்பொருள். அநித்தமாதல் சாத்திய தன்மம். மூர்த்தமாதல் சாதனதன்மம். ஆகாசம்போல் என்றது திருஷ்டாந்தவசனம். ஆகாசம் திருஷ்டாந்தப்பொருள். 'யாதொன்று யாதொன்று மூர்த்தம், அது அநித்தம்' என்றது அன்னுவய வியாப்திவாசகம்: இதனாற் சொல்லப்பட்டது சாதனதன்மமான மூர்த்தமாதலையுடையனவெல்லாம் அநித்தமாயுள்ளன என்பதாம்.

இனி, இதன் இலக்கணத்தை இவ்வுதாரணத்துள் பொருத்திக்காட்டும் விளக்கவுரை வருமாறு:—

"........எனுந் திருட்டாந்தத்துச்
சாத்திய தன்மமா யுள்ள வநித்தமும்
சாதன தன்மமா யுள்ள மூர்த்தமும்
இரண்டும் ஆகாசம் அசத்து என்பானுக்கு
அதன்கண் இன்மையானே குறையும்" (௩.௭௯—அ௩)

என்பது.

இதனுள், 'எனும்' என்றது, வாதிகூற்றாகக் காட்டப்பட்ட இத்திருட்டாந்தப்போலியின் உதாரணத்தைக் குற்றங்காட்டி விளக்குதற்கு அநுவதித்துக்கொண்டமைதோன்ற நின்றது.

'சாத்தியதன்மமாயுள்ள அநித்தமும்' என்றது சத்தம் அநித்தம் என்ற பிரதிஜ்ஞாவாசகத்தால், சத்தத்தைப் பக்கப்பொருளாகக்கொண்டு, அதன்கண்ணே துணியக்கருதிய சாத்தியதன்மமாகிய அநித்தத்தன்மையும் என்றவாறு.

அநித்தத்தன்மை ஈண்டு முதலாகுபெயரால் அநித்தமெனப் பட்டது.

'சாதனதன்மமாயுள்ள மூர்த்தமும்' என்றது 'சத்தம் அநித்தம்' என்ற பக்கவசனத்தை அடுத்து, 'மூர்த்தமாதலால்' என்ற ஏதுவசனத்தாற் சொல்லப்பட்ட சாதனதன்மமாயுள்ள மூர்த்தத் தன்மையும் என்றவாறு.

மூர்த்தத்தன்மை ஈண்டு முதலாகுபெயரால் மூர்த்தமெனப் பட்டது. மூர்த்தத்தன்மை - வடிவுடைப்பொருளாந்தன்மை.

'இரண்டும் ஆகாசம் அசத்தென்பானுக்கு அதன்கண் இன்மையானே குறையும்' என்றது கீழே காட்டப்பட்ட சாத்திய தன்மமும் சாதனதன்மமுமாகிய அநித்தியத்துவ மூர்த்தத்துவங்கள் இரண்டும் ஆகாசமென ஒருபொருளில்லை என்னும் எதிரிக்கு அதன்கண் தோன்றாமையால் அவை இல்லனவாம் என்றவாறு.

இதனாற் சொல்லியது திருஷ்டாந்தப்பொருள் இல்லாதொழியவே அதன்கண் (அவ்வில்லாதபொருளில்) உள்ளனவாகச்சொல்லும் சாத்திய சாதன தன்மங்களும் இல்லனவாயொழியும் என்றபடி.

சாத்திய சாதன தன்மங்களிரண்டுமில்லாமையால் இது உபய தன்மவிகலமெனப்பட்டது. விகலம் எனினும் குறை எனினும் ஒக்கும்.

இனி, ஆகாசம் உண்டென்பானுக்கு இவ்வுதாரணம் என்னாமென்னிற் சன்னாம் என்கிறது; அது வருமாறு:—

'உண்டென்பானுக்கு ஆகாசம் நித்த
அமூர்த்தமாதலால் அவனுக்கும் குறையும்' (௩ ௮௪—௮௫)

என்பது.



இதன்பொருள்: 'உண்டென்பானுக்கு' என்றது ஆகாசம் என்று ஒருபொருளுண்டு என்று தெளிந்தவனாயுள்ள எதிரிக்கு என்றவாறு.

'ஆகாசம் நித்தவமூர்த்தமாதலால்' என்றது, இங்கு, திருஷ்டாந்தப் பொருளாகக்காட்டப்பட்ட ஆகாசம், வாதி காட்டக்கருதிய சாத்திய சாதன தன்மங்களாகிய அநித்தத்தன்மை மூர்த்தத் தன்மைகளுக்கு மாறாயுள்ள நித்தத்தன்மையும் அமூர்த்தத் தன்மையும் உடையதாயிருத்தலால் என்றவாறு.

'அவனுக்கும் குறையும்' என்றது, ஆகாசம் உள்ளது என்று கொண்ட எதிரிக்கும் இது (இவ்வுதாரணம்) சன்னாகவுள்ள உபய தன்மவிகலமாம் என்றவாறு. [ஆகாசம் உண்டேன்பானுக்கு என்று தொடங்கிய இக்கூற்று நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

இக்கூற்றாற் சொல்லியது 'சன்னு' என்னும் உபயதன்மவிகலமும், 'அசன்னு' என்னும் உபயதன்மவிகலமும் தனித்தனி வேறாயுள்ள திருஷ்டாந்தப்போலிகளல்ல; திருஷ்டாந்தப்பொருள் உள்ளது என்று உணர்ந்த எதிரிக்கு அதில் உபயதன்மமும் இல்லாதவழி, சன்னாயுள்ள வுபயதன்மவிகலமாகவும், அல்லாதானுக்கு அசன்னாயுள்ள வுபயதன்மவிகலமாகவும் கொள்ளக்கடவது என்பதாம்.

திருஷ்டாந்தப்பொருள் இல்லதாகவே உபயதன்மமும் இல்லனவாயொழிதலால், அசன்னில், சாத்தியதன்மவிகலம், சாதனதன்மவிகலம் எனத் தனித்தனி கொள்ளப்படாமல் உபய தன்மவிகலமொன்றே கொள்ளப்பட்டுள்ளது.

## 4. அநன்னுவயம்.

இதுகாறும் திருஷ்டாந்தப்பொருளைப்பற்றியுள்ள அர்த்த தோஷம் சொல்லிவிட்டு, மேல் திருஷ்டாந்தவாசகம் வழங்க வேண்டியமுறை தவறுதலானுண்டாகும் சப்த (வாக்கிய) தோஷம் சொல்லத்தொடங்கி, முதலில் அநன்னுவயம் என்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் செய்யப்படும்.

அது நியாயப்பிரவேசத்தில் வருமாறு:—

‘𑌅𑌨𑌨𑍍𑌵𑌯𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌵𑌿𑌨𑌾𑌨𑍍𑌵𑌯𑍇𑌨 𑌸𑌾𑌧𑍍𑌯
𑌸𑌾𑌧𑌨𑌯𑍋𑌃 𑌸𑌹𑌭𑌾𑌵𑌃 𑌪𑍍𑌰𑌦𑌰𑍍𑌶𑍍𑌯𑌤𑍇 ।
𑌯𑌥𑌾 𑌘𑌟𑍇 𑌕𑍃𑌤𑌕𑌤𑍍𑌵𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑌿 ॥

என்பது.

இதன்பொருள்:— ‘அநன்னுவயமென்னும் திருஷ்டாந்தப் போலியாவது—எந்த திருஷ்டாந்தவசனத்தில் (சாதன சாத்தியங்களுக்குள்ள) அந்நுவயவியாப்திவசனம் சொல்லாமலே (அவற்றின்) உடனிகழ்ச்சி காட்டப்படுகிறதோ? (அது). எங்ஙனமெனில், குடத்தின்கண் பண்ணப்படுதலும் அநித்தியத்தன்மையும் காணப்பட்டது; என்பது’ என்றவாறு.

இதனுள், ‘எந்தத் திருஷ்டாந்தவசனத்தில் சாதன சாத்தியங்களுக்குள்ள அந்நுவயவசனம் சொல்லாமலே அவற்றின் உடனிகழ்ச்சி காட்டப்படுகிறதோ (அது)’. என்றது இலக்கணம். [ஏனையவற்றிற்கும் இலக்கணங்கூறுது இதற்குமட்டும் இலக்கணங் கூறுதல் முறைபிறழ்வு.] ‘குடத்தின்கண் பண்ணப்படுதலும், அநித்தியத்தன்மையும் காணப்பட்டது’ என்றது உதாரணம். இவ்வுதாரணத்துக்குரிய பக்ஷ சாத்திய ஏது வசனங்கள் சொல்லாமல் விடப்பட்டன; அவை ‘சத்தம் அநித்தம்; பண்ணப்படுதலால்’ என்பன. இவ்வுதாரணம், ‘குடத்தின்கண் பண்ணப்படுதலும் அநித்தியத்தன்மையும் காணப்பட்டது’ என்று முறைபிறழக் கூறியிருப்பினும், அதற்கு, பண்ணப்படுதலும், அநித்தியத்தன்மையுமுள்ள குடம்போலும் என்பதே கருத்தாகக்கொள்க.

மணிமேகலையில் இத்திருட்டாந்தப்போலி அந்நுவயவசனமொழிந்த மற்றெல்லாம் முறையே சொல்லப்பட்டதாயுள்ளது. அது வருமாறு:—

‘அநன்னுவய மாவது சாதந சாத்தியந்
தம்மிற் கூட்டமாத் திரஞ்சொல் லாதே
யிரண்ட னுடைய வுண்மையைக் காட்டுதல்
சத்த மநித்தங் கிருத்த மாதலின்
யாதொன்று யாதொன்று கிருத்தம தநித்தமெனு
மன்னுவயஞ் சொல்லாது குடத்தின் கண்ணே



கிருத்த வநித்தங் காணப் பட்ட
வென்று லன்னுவயந் தெரியா தாகும்’ (௩. ௮௬—௯௩.)

என்பது.

இதனுள், ‘அநன்னுவயமாவது: சாதன சாத்தியந் தம்மிற் கூட்டமாத்திரஞ் சொல்லாதே இரண்டனுடைய உண்மையைக் காட்டுதல்’ என்றது இலக்கணம்.

இதன்பொருள் :— ‘அநன்னுவயமென்னும் திருட்டாந்தப் போலியின் இலக்கணமாவது.— சாதனவுறுப்பான திருஷ்டாந்த வசனத்துள், சாதனசாத்தியங்களுடைய உடனிகழ்ச்சியைக் காட்டும் வியாத்திவாசகம்மட்டும் சொல்லாமலே பக்ஷ சாத்திய ஏதுக்களைச் சொல்லி, அந்த சாதனசாத்தியங்களிரண்டும் திருஷ்டாந்தப்பொருளில் உண்டு என்று சொல்லுதல்’ என்றவாறு. இரண்டினுடைய உண்மையைக் காட்டுதல் என்றுராயினும், சாதனசாத்தியங்களிரண்டுமுள்ள பொருளைத் திட்டாந்தமாகக் காட்டுதல் என்பது கருத்தாகக்கொள்க.

அன்னுவயவாசகம் சொல்லப்படாமையால் இஃது அநன்னுவயமெனப்பட்டது. அநன்னுவயம் என்னும் இத்திருட்டாந்தப் போலியின் பெயர் முதலாகுபெயராய் அதன் இலக்கணத்தையுணர்த்திற்று. ‘சாதனசாத்தியந்தம்மின்’ என்பதில் ‘தம்’ ‘இன்’ என்பன ஆறுவதன்பொருள்பற்றிவந்த சாரியைகள்; சாதனசாத்தியங்களுடைய என்றபடி.

கூட்டம் - உடனிகழ்ச்சி; அதனைச் சொல்லுதலாவது—‘யாண்டுப் புகையுண்டு ஆண்டுத் தீயுண்டு’ என்பதுபோல எது எது சாதனதன்மமுள்ளதோ, அது அது சாத்தியதன்மமுள்ளது என்னும் பொருள்தோன்றுமாறு அவ்வவ்வநுமாநங்களுக்கேற்றசிறப்பு வாய்பாடுபற்றிக் கூறுதல்.

இனி, இதன் உதாரணங் காட்டி விளக்கப்படும். அது வருமாறு:—

‘சத்த மநித்தம் கிருத்த மாதலின்
யாதொன்று யாதொன்று கிருத்தம தநித்தமெனு
மன்னுவயஞ் சொல்லாது குடத்தின் கண்ணே
கிருத்த வநித்தங் காணப் பட்ட
வென்று லன்னுவயந் தெரியா தாகும்’ (௩. ௮௬—௯௩.)

இதன்பொருள்:—'அநன்னுவயம்' என்னும் திருஷ்டாந்தப் போலிக்கு உதாரணமாவது, 'சத்தம் அநித்தம்' எனத் துணியக் கருதுமொருவன், 'சத்தம் அநித்தம், கிருத்தமாதலின்;' என்று பக்ஷ சாத்திய ஏதுவசனங்களைச்சொல்லி, அதனை அடுத்துக் கூறக் கடவதான 'யாதுயாது கிருத்தமோ, அது அது அநித்தம்' என்னும் சாதர்மிய அன்னுவயவியாப்திவாசகத்தைச் சொல்லாமலே, 'குடத்தின்கண்ணே கிருத்தமும் அநித்தமும் காணப்பட்டன' என்றால் சாதன சாத்திய தர்மங்களின் உடனிகழ்ச்சி தோன்றாதாதலால் துணிபொருட்பேறின்றாய்முடியும் என்றவாறு.

இவ்வாறு உதாரணங்காட்டினால் கிருத்தமாயுள்ளனவெல்லாம் அநித்தமாயுள்ளன என்னும் அன்னுவயம் தெரியாதென்பதாம்.

'குடமே கிருத்தமும் அநித்தமுமாயிருத்தலால், அக்குடத்தின்கண்ணே கிருத்தமும் அநித்தமும் காணப்பட்டன' என்றதன் கருத்து, குடத்தின்கண்ணே கிருத்தத்தன்மையும் அநித்தத்தன்மையும் காணப்பட்டன என்பதாம். கிருத்தம் - செய்யப்பட்டது; இது தர்மிவாசகமாய் அதன் பண்புணரநின்றது. அநித்தமென்பதும் அது.

'யாதொன்று யாதொன்று கிருத்தம், அது அநித்தம்' என்றது, நல்லநுமானத்தின் திருஷ்டாந்தவுறுப்பாகச் சொல்லப்பட்டுவரும் அன்னுவய வியாத்திவாசகத்தைச் சொல்லாமலொழித்தற்குப் பிரதியோகியுணர்ச்சியுண்டாகவேண்டி அவ்வாக்கியத்தை அநுகரித்துக்காட்டிக் கழித்தவாறு.

'அன்னுவயம் சொல்லாது' என்றது 'அன்னுவயவியாப்திவாசகம் சொல்லாமல்' என்றபடி.

கிருத்தமும் அநித்தமும் 'கிருத்தவநித்தம்' என உம்மைத்தொகையாகிய பன்மைப்பெயராயிருத்தலால், 'காணப்பட்ட' எனப் பன்மைப்பயனிலை கொண்டது. என்றால் என்றது எதிரி கூற்றின் அநுவாதக்குறிப்பாயிற்று.

'அன்னுவயம் தெரியாதாகும்' என்றது, அன்னுவயவியாத்தியுணர்வுண்டாகாமையால் துணிபொருளுணர்வுதோன்றாது என்னும் குறிப்புணரநின்றது.



இத்திருட்டாந்தம், பொருளாற் குற்றமுடையதன்றாயினும், அதனைச் சொல்லவேண்டியமுறைப்படி சொல்லாமல்விட்ட சொற்குற்றமுடைமையால் மந்தமதிகளுக்குப் பொருட்டொடர்பு தோன்றாதாதலாற் போலியாயிற்று.

### 5. விபரீதான்னுவயம்.

இனி, நியாயப்பிரவேசத்தில் விபரீதான்னுவயமென்னும் திருஷ்டாந்தப்போலிநிரூபணம் வருமாறு:—

'𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑍍𑌵𑌯𑍋 𑌯𑌥𑌾? 𑌯𑌤𑍍 𑌕𑍃𑌤𑌕𑌂
𑌤𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑍇
𑌯𑌦𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍 𑌕𑍃𑌤𑌕𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑌿 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿॥'

இதன்பொருள்: 'விபரீதான்னுவயம் எங்ஙனமெனில்? "எது செய்யப்பட்டதோ அது அநித்தியப்பொருளாகக் காணப்பட்டது" என்று சாதன்மிய அந்நுவயவியாப்திவசனம் சொல்லவேண்டுமிடத்தில், "யாதொன்று அநித்தியம், அது செய்யப்பட்டதாகக் காணப்பட்டது" என்று (சாதன சாத்திய தர்மங்களைத் தலைதடுமாறாக மாற்றிச்) சொல்லுவது' என்றவாறு. '𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿' என்றது, சொல்லுகிறது என்னும் தமிழ்வழக்குப்போலும்.

இவ்வுதாரணமும் பக்ஷ சாத்திய சாதன தர்ம வாசகங்களின்றியே காட்டப்பட்டிருக்கிறது. இதுவும் குன்றக்கூறலே.

இனி, இது மணிமேகலையுள் வருமாறு:—

"விபரீதான் னுவயம் வியாபகத் துடைய
வன்னுவயத் தாலே வியாப்பியம் விதித்தல்
சத்த மநித்தங் கிருத்தத் தாலெனில்
யாதொன்று யாதொன்று கிருத்த மநித்தமென
வியாப்பியத் தால்வியா பகத்தைக் கருதா
தியாதொன் றியாதொன் றநித்தமது கிருத்தமென
வியாபகத் தால்வியாப் பியத்தைக் கருதுதல்
அப்படிக் கருதின்வியா பகம்வியாப் பியத்தை
யின்றியும் நிகழ்த லின்விப ரீத
மாம் ........................" (௩௯௪—௪௦௩.)

என்பது.

இதனுள், 'விபரீதான்னுவயம் வியாபகத்துடைய வன்னுவயத்தாலே வியாப்பியம் விதித்தல்' என்பது இலக்கணம். (இது நியாயப்பிரவேசத்தில் இல்லை.)

இதன்பொருள்: 'விபரீதான்னுவயமென்னும் திருஷ்டாந்தப் போலியின் இலக்கணமாவது: வியாபகப்பொருளாகிய சாத்திய தர்மத்தின் உடனிகழ்ச்சிகொண்டு வியாப்பியப்பொருளாகிய சாதனதன்மமுளதாகக் காட்டுதல்' என்றவாறு.

விபரீதான்னுவயம் என்னும் திருஷ்டாந்தப்போலியின்பெயர் அதன் இலக்கணத்துக்கு ஆனமையால் ஆகுபெயர்.

வியாபகமாவது: உடனிகழும்பொருள்களிரண்டனுள் யாதொன்று பிறிதொன்றிற்கு அடங்காது மிக்கிருப்பதோ அது. அதாவது: உடனிகழ்வதொன்றைவிட்டுப் பிரிந்துமிருப்பது என்பதாம்.

வியாப்பியமாவது: உடனிகழும்பொருள்களிரண்டனுள் யாதொன்று பிறிதொன்றிற்கு அடங்கியிருப்பதோ அது; அதாவது: உடனிகழ்வதொன்றைவிட்டுப் பிரியாதிருப்பது என்பதாம்.

இவற்றைப் பின்வரும் உதாரணத்தால் அறியலாம். நெருப்பும் புகையுமா மிவற்றுள், நெருப்பு, புகையுள்ளவிடங்களி லிருந்துகொண்டே புகையில்லாத பழுக்கக்காய்ச்சிய இரும்பிலும் பிரிந்திருத்தலால் புகையில் அடங்கியதாகாது வியாபகமாயிற்று.

புகை, நெருப்புள்ள அடுக்களை முதலியவற்றுள் நெருப்புடன் கூடியிருப்பது; பழுக்கக்காய்ச்சிய இரும்புமுதலியவற்றுள் நெருப்பைவிட்டிருப்பினும், நெருப்பில்லாதவற்றில் இல்லாமையால் நெருப்பில் அடங்கியதாய் வியாப்பியமாயிற்று. இவ்வாறே மற்றுமுள்ள வியாப்பிய வியாபகப்பொருள்கள் கண்டுகொள்க.

அன்னுவயமாவது - உள்ளபொருள்களின் உடனிகழ்ச்சி. விதித்தல் - பயனிலையாலுணர்த்தல்.

'வியாபகத்துடைய அன்னுவயத்தாலே வியாப்பியம் விதித்த'லாவது.— அதிகதேசவிருத்தியான சாத்தியதர்மத்தின் உடனிகழ்ச்சிகொண்டு அதற்கு ஏகதேசவிருத்தியான சாதனதன்ம



முளதாகக் கூறுதல்; அது, 'யாதுயாது நெருப்புடைத்து, அது அது புகையுடைத்து' என்பது போல்வது.

இனி, இதன் விளக்கவுரை வருமாறு:—

'சத்த மநித்தங் கிருத்தத் தாலெனில்
யாதொன்று யாதொன்று கிருத்த மநித்தமென
வியாப்பியத் தால்வியா பகத்தைக் கருதாது
யாதொன் றியாதொன் றநித்தமது கிருத்தமென
வியாபகத் தால்வியாப் பியத்தைக் கருதுதல்'

(௱௯௯—௨00.)

இதனுள், சத்தம் - பக்கப்பொருள். அநித்தமாதல் சாத்திய தன்மம்; இது, செய்யப்பட்ட குடமுதலியவற்றுள் கிருத்தமாதலுடன்கூடியிருப்பினும் செய்யப்படாத மின்னல் முதலியவற்றினும் பிரிந்திருத்தலால் வியாபகமாயிற்று.

கிருத்தமாதல் - சாதனதன்மம்; அது கிருத்தம் என முதலாகுபெயராய்ப் பின் அத்துச்சாரியையும் மூன்றனுருபும் பெற்று 'கிருத்தத்தால்' என நின்றது; கிருத்தமாதலால் என்றபடி. கிருத்தமாதல் - செய்யப்பட்டதாதல்.

இத்துணையும் பக்ஷ சாத்திய சாதனதன்மவசனங் கூறியவாறு. [இவையும் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

'எனில்' என்றது, என்னும் இடத்தில் என்ற பொருளில் 'இல்' என்னும் இடப்பெயருடன் 'என்' என்னும் வினைமுதனிலைகூடி வினைத்தொகைநிலைத்தொடர்ப்பெயராய் ஏழாவதன்பொருள்பட நின்றது. 'செயின்' என்னும்வாய்பாட்டு வினையெச்சமெனினும் அமையும்.

இதனால், 'சத்தம் அநித்தம், கிருத்தமாதலால்' என்று சாதன வுறுப்புக்கூறுமிடத்தில் என்றதாயிற்று.

'யாதொன்று யாதொன்று கிருத்த மநித்தமென' என்றது முறைபிறழாது சொல்லத்தகும் வியாத்திவாசகத்தை, பின்பு முறை பிறழக்கூறும் உதாரணவாய்பாடு விளங்குதற்கு அநுகரித்துக் காட்டியவாறு. (இது, பொன்னின்மாற்றறிதற்குத் தீட்டிய உரையாணியுரை போல்வது.)

இதனுள், கிருத்தம் (கிருத்தமாதல்) சாதனதன்மமும், அநித்தம் (அநித்தமாதல்) சாத்தியதன்மமும் ஆதலால் சாதன தன்மத்தை முற்கூறிச் சாத்தியதன்மத்தைப் பிற்கூறல் முறை யென்பதாயிற்று.

ஈண்டு, வியாப்பியம் சாதனதன்மமும் வியாபகம் சாத்திய தன்மமும் ஆதலால், வியாப்பியத்தால் வியாபகத்தைக் கருதாது என்றது சாதனதன்மத்தால் சாத்தியதன்மத்தைக் கருதுதல் முறை; அங்ஙனம் செய்யத்தவறி யென்றவாறாயிற்று.

'யாதொன்று யாதொன்று அநித்தம் அது கிருத்தம்' என்றது இத்திருஷ்டாந்தப்போலியின் உதாரணங் காட்டியவாறு.

'என' என்றது அநுகாரக்குறிப்பாய் இவ்விலக்கணத்தைப் பொருத்திக்காட்டுதற்கு இடைப்பட்டுநின்றது.

'வியாபகத்தால் வியாப்பியத்தைக் கருதுதல்' என்றது, இத்திருஷ்டாந்தப்போலியிலக்கணத்தை உதாரணத்திற் பொருத்திக்காட்டியவாறு.

'அப்படிக்கருதின்' என்றது, வியாபகத்தால் வியாப்பியத்தைக் கருதினால் (துணிபொருளால் ஏதுப்பொருளைக் கருதினால்) என்றவாறு.

'வியாபகம் வியாப்பியத்தையின்றியும் நிகழ்தலின்' என்றது, வியாபகமான அநித்தத்தன்மையாகிய துணிபொருள், வியாப்பியமான கிருத்தத்தன்மையைவிட்டு விலகி மின்னல் முதலியவற்றிலு முண்மையால் என்றவாறு.

'விபரீதம்' என்றது விபரீதான்வயமாம் என்றவாறு; அன்வய வியாப்திவாசகத்தை விபரீதமாக (-தலைதடுமாறாக)க் கூறுதலால் இது விபரீதான்வய மெனப்பட்டது.

இதுகாறும் சாதன்மியதிருஷ்டாந்தப்போலிவகை சொல்லப் பட்டன. இனி, வைதன்மியதிருஷ்டாந்தப்போலிவகை சோல்லப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

உ

# பாண்டியர் வரலாறு.

[௧௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

சடையவர்மன் குலசேகரபாண்டியன்:—பராக்கிரமபாண்டியன் தம்பியாகிய இவ்வரசன் கி. பி. 1429 முதல் 1473 வரையில் ஆட்சி புரிந்தவன். எனவே, இவன் தன் தமையனுடன்சேர்ந்து தென் பாண்டிநாட்டை அரசாண்டவனாதல்வேண்டும். பராக்கிரமபாண்டி யன்காலத்தில் தொடங்கப்பெற்று முடிவுபெறாமலிருந்த ஒன்பது நிலைக்கோபுரத்திருப்பணியை இவன் முடித்தமை அறிதற்குரிய தாகும்[1].

அழகன்பெருமாள் பராக்கிரமபாண்டியன்:—இவன் சடைய வர்மன் குலசேகரபாண்டியன் புதல்வன்; கி. பி. 1473 முதல் 1506 வரையில் அரசுசெலுத்தியவன். இவன்காலத்தில் பராக்கிரமபாண் டியனான குலசேகரதேவன் என்ற வேறொரு மன்னன் இருந்தனன் என்பது சில கல்வெட்டுக்களாற் புலப்படுகின்றது[2]. அவன் கல்வெட்டுக்கள் கி. பி. 1479 முதல் 1499 வரையில் உள்ளன. அவன் யாவன் என்பது தெரியவில்லை.

இனி, அபிராமபராக்கிரமபாண்டியன் ஆகவராமன் என்ற உடன்பிறப்பினர் இருவர் இருந்தமை புதுக்கோட்டைச் செப் பேடுகளால் அறியப்படுகின்றது[3]. இவர்களைப்பற்றிய செய்திகள் கிடைத்தில.

சடையவர்மன் சீவல்லபபாண்டியன்:— இவன் ஆகவராமன் புதல்வன்; கி.பி. 1534-முதல் 1543-வரையில் அரசாண்டவன். இவனுக்கு 'இறந்தகாலமெடுத்தவன்[4]' 'பாண்டியராச்சிய தாபனா சாரியன்[5]' என்ற பட்டங்களும் உண்டு. இவன்காலத்தில் திருவாங் கூர் இராச்சியத்திலிருந்த உதயமார்த்தாண்டவர்மன் என்ற சேர

---

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Travancore Archaeological Series | Vol. I. | page | 103. |
| 2 | Do | Do | p. | 60. |
| 3 | Do | Do | p. | 83. |
| 4 | Do | Do | Do | 47. |
| 5 | Do | Do | Do | 54. |

மன்னன் ஒருவன், தென்பாண்டிநாட்டைக் கைப்பற்றிக்கொண்டான். அச்சேரன் கல்வெட்டுக்கள் பிரமதேசம், சேரமாதேவி, அம்பாசமுத்திரம், களக்காடு ஆகிய ஊர்களில் உள்ளன[1]. ஆகவே, இப்பகுதி அவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது என்பது திண்ணம். தன்நாட்டை இழந்த சீவல்லபபாண்டியன், விசயநகரவேந்தனாகிய அச்சுததேவராயனிடம் முறையிடவே, அவனும் பெரும் படையோடு தென்னாட்டிற்குவந்து உதயமார்த்தாண்டவர்மனைப் போரில்வென்று அவன் கைப்பற்றியிருந்த தென்பாண்டிநாட்டைப் பிடுங்கிப் பாண்டியற்குக் கொடுத்தனன்[2]. விஜயநகரவேந்தன் இங்ஙனம் விரைந்து செய்தமைக்கு மற்றொருகாரணமும் உண்டு. அது, சேரமன்னன் சில ஆண்டுகள் அவனுக்குக் கப்பஞ்செலுத்தாதிருந்தமையேயாம்.

அச்சுததேவராயன் இத்தகைய அரிய உதவிபுரிந்தமைபற்றிச் சீவல்லபன் தன் மகளை அவனுக்கு மணஞ்செய்துகொடுத்து மகிழ்ச்சியுற்றான்[3]. இந்நிகழ்ச்சியினால் பாண்டியர்குலத்திற்குப் பழையபெருமையும் சிறப்பும் மீண்டும் உண்டாகுமாறு தான் செய்துவிட்டதாக எண்ணி 'இறந்தகாலமெடுத்தவன்' 'பாண்டியராச்சியதாபனாசாரியன்' என்ற பட்டங்களை இவன் புனைந்துகொண்டனன்போலும்.

**சடையவர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியன்:**—இவன் அபிராமபராக்கிரமபாண்டியனுடைய முதற்புதல்வன். இவனுடைய கல்வெட்டுக்கள் கி.பி. 1543-முதல் 1552-வரையில் உள்ளன. இவனைப்பற்றி யாதும் தெரியவில்லை.

**நெல்வேலிமாறன்:**— இவன் அபிராமபராக்கிரமபாண்டியனுடைய இரண்டாவது புதல்வன்; கி. பி. 1552 முதல் 1564 வரையில் ஆட்சிபுரிந்தவன். இவனுக்கு வீரபாண்டியன், குலசேகரபாண்டியன், பொன்னின்பாண்டியன், தர்மப்பெருமாள், அழகன் பெருமாள் என்ற வேறுபெயர்களும் உண்டு. இவன் புலவர்கள் பாடிய வீரவெண்பாமாலைகொண்டவன் என்று தென்காசியிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது[4].

[1] Travancore Archaeological Series Vol. I. page 55.
[2] Do Do Do
[3] Do Do Do 56.
[4] Do Do Ins. No. VII



**சடையவர்மன் அதிவீரராமபாண்டியன்:**—இவன் நெல்வேலிமாறன் முதல்மகன்; கி. பி. 1564 முதல் 1604 வரையில் அரசு செலுத்தியவன். இவனை அழகன் சீவலவேள் எனவும் வழங்குவர். தன்தந்தையாகிய நெல்வேலிமாறனை நினைவுகூர்தற்பொருட்டுத் தென்காசியில் குலசேகரமுடையாராலயம் ஒன்றை இவன் எடுப்பித்திருப்பது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்[1]. இதன் அண்மையில் இவன் எடுப்பித்த விண்ணகரம் ஒன்றும் உளது. இவன் செந்தமிழ்ப்புலமையிற் சிறந்துவிளங்கியவன் என்பது இவன்பாடியுள்ள சில தமிழ்நூல்களாற் புலப்படுகின்றது.

வடமொழியில் ஹர்ஷன் இயற்றியுள்ள நைஷதம் என்றநூலை இவன் தமிழில் மொழிபெயர்த்துப்பாடியுள்ளனன். அது நைடதம் என்று வழங்கப்படுகிறது. அந்நூலை மொழிபெயர்த்தற்கு இவனுக்கு உதவிபுரிந்தவர் நைஷதம் இராமகிருஷ்ணர் என்ற வடமொழிப்புலவர் ஆவர்[2]. இவன்பாடியுள்ள பிறநூல்கள் கூர்மபுராணம் வாயுசங்கிதை காசிகாண்டம் இலிங்கபுராணம் நறுந்தொகை என்பன. இவன் சிவபெருமானிடத்தில் மிகுந்த ஈடுபாடுடையவனாக ஒழுகிவந்தனன் என்பது இவன் இயற்றியுள்ள சைவபுராணங்களால் நன்கு விளங்கும்.

**வரதுங்கராமபாண்டியன்:**—இவன் பராக்கிரம குலசேகரபாண்டியனுடைய இரண்டாவது மகன்; கி. பி. 1588ல் முடிசூட்டப்பெற்றவன். அபிராமசுந்தரேசுவரன் எனவும் வீரபாண்டியன் எனவும் செப்பேடுகளில் இவன் குறிக்கப்பெற்றிருத்தல் அறியத்தக்கது[3]. அதிவீரராமபாண்டியனாட்சிக்காலத்தில் தென்பாண்டிநாட்டிற் சிலபகுதிகளைக் கரிவலம்வந்தநல்லூரிலிருந்து இவன் அரசாண்டவனாதல்வேண்டும் என்பது சிலகுறிப்புக்களால் அறியப்படுகின்றது[4]. இவன் வில்லவனை வென்றானென்றும் வல்லமெறிந்தா

[1] Travancore Archaeological Series Vol. I. page 50.
[2] Do Do page 85.
[3] Do Do pages 115 and 133.
[4] Do Do page 125

னென்றும் தென்காசியிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது[1]. இவனால் வென்றடக்கப்பெற்ற சேரமன்னன் யாவன் என்பதும் வல்லத்தில் இவன் யாருடன் போர்புரிந்தான் என்பதும் புலப்படவில்லை.

அதிவீரராமபாண்டியனைப்போல் இவ்வேந்தனும் தமிழ்மொழியில் பெரும்புலமை படைத்தவன் என்பது இவன் இயற்றியுள்ள தமிழ்நூல்களால் நன்கு துணியப்படும். அவை, பிரமோத்தர காண்டம், கருவைக் கலித்துறையந்தாதி, கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, கருவை வெண்பா அந்தாதி என்பன[2]. இவனும் சிவபெருமானிடத்து ஒப்பற்ற பத்தியுடையவனாயிருந்தனன் என்பது இவனியற்றிய நூல்களால் இனிது புலனாகும்.

அதிவீரராமபாண்டியற்குச் சுவாமிதேவரும் வரதுங்கராமபாண்டியற்கு வேம்பற்றூர் ஈசானமுனிவரும் ஞானாசிரியர்களாக இருந்திருத்தல்வேண்டும் என்பது இவர்கள் தம்நூல்களிற் கூறியுள்ள குருவணக்கங்களாற் பெறப்படுகின்றது. [தொடரும்.]

T. V. சதாசிவபண்டாரத்தார்,
தமிழ்ப்பண்டிதர், வாணாதுறைஹைஸ்கூல்,
கும்பகோணம்.

---

[1] பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்குங்
கொற்ற முயர்க்குமறங் கூறுமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

திருநெல்வேலிஜில்லாவிலுள்ள தென்காசியில்வாழ்ந்த கலியன்கவிராயர் என்பவர் வரதுங்கராமபாண்டியன் முடிசூட்டுவிழாவில் நாண்மங்கலமும் குடைமங்கலமும் வாண்மங்கலமும் பாடி அரசனைப் பாராட்டியுள்ளனர். அவற்றுள் இப்பாடல் வாண்மங்கலமாகும். ('கல்வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப்புலவர்கள்' என்ற எனது கட்டுரையில் இவற்றைக் காணலாம்:—செந்தமிழ்த்தொகுதி 29, பக்கங்கள் 291-296)

[2] இவ்வந்தாதிகள் அதிவீரராமபாண்டியனால் பாடப்பெற்றவை என்பர். அது தவறாகும்.

௨

# திருவள்ளுவர்காலம்.

[கஅஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## 7. புத்த ஜைன மதங்களின் வாடை.

திருவள்ளுவரை இன்ன மதத்தினரெனத் துணிந்துகூறற்கேற்ற ஆதாரங்களில்லை. எம்மதத்தவராயினும், திருவள்ளுவர் எம்மதத்தினருக்கும் சம்மதமாகும் நீதியொழுக்கங்களையே தம் நூலில் தொகுத்துக்கூறியுள்ளார். வள்ளுவரை வைதிகமதத்தவர் எனக் கொள்ளச் சில ஆதாரங்கள் உள; எனினும், குறளை நன்கு ஆராய்ந்துபார்ப்போருக்கு அந்நூல் ஆக்கப்பட்டகாலத்தில் இன்ன இன்ன மதங்கள் தமிழகத்திற் பரவியிருந்திருக்கவேண்டுமென்பது நன்குபுலப்படும். புத்த ஜைன மதங்கள் வள்ளுவர்காலத்திலாவது அவருக்கு முன்பாவது தமிழகத்திற் பரவியிருந்திருக்கவேண்டுமென்பது குறள்நூலால் விளங்குகிறது. சிலர் குறளிற் காணப்படும் சொற்றொடர்களைக்கொண்டு, இவரைப் புத்தமதத்தவர் என்றும் ஜைனர் என்றும் தவறாகக் கொள்வர். திருவள்ளுவர் கொண்ட பஞ்சபூதக்கொள்கையையும், அவர் குறளிற் கூறுகின்ற சில தெய்வங்களின் பெயரையும் நோக்குவார்க்கு, வள்ளுவர் புத்த ஜைன மதங்களைச் சார்ந்தவரல்லரென்பது நன்குவிளங்கும். அஃதெவ்வாறாயினும், வள்ளுவர் தம் காலத்து மிக்குப் பரவியிருந்த புத்த ஜைன மதங்களில் விதந்து கூறப்பட்ட அறங்களை நன்கு போற்றித் தம்நூலில் அமைத்துள்ளார் என்று கொள்ளக் குறள் இடந்தருகிறது.

புத்த ஜைன மதங்கள் தோன்றியதன் சரித்திரவுண்மையையிவ்விடத்துச் சிறிது கூறுதல் சாலவும் பொருத்தமுடையதாகும். ஆரியர்களுள் நான்கு ஜாதிகள் ஏற்பட்டு, நாளடைவில் அந்தணர்களின் ஆதிக்கம் அதிகமாயிற்று. துறவியாதற்கும், தவமியற்றி முத்திபெறுதற்கும், அந்தணர்க்கே உரிமையுண்டென்ற கொள்கை ஆரியர்களிடையே பரவலாயிற்று. இவ்வுண்மையை இராமாயணக்

கதைமூலம் அறியலாம். நான்காவதுவருணத்தைச்சேர்ந்த சம்புகன் என்பான் தனக்குப் பிறப்பினால் உரிமையில்லாத தவத்தைச் செய்துவந்ததனால் ஓர் அந்தணன்மகன் இறந்தான். அரசியலில் நிகழும் முறைக்கேடே அம்மகனிறத்தற்குக் காரணமாயிருக்குமெனக்கருதிய அவ்வந்தணன், அயோத்தியையாண்ட இராமபிரானிடத்தில் அச்செய்தியை முறையிட்டான். இராமபிரானும் சம்புகன்செய் தவமே, அம்மகனிறத்தற்குக் காரணமெனக்கருதித் தன் தம்பியால் அச் சம்புகனைக் கொல்விக்கவே, அம்மகன் உயிர்பெற்றெழுந்தான் என்பது இராமாயணத்திற்கண்ட கதையாகும். இதைக் குலசேகராழ்வாரும் பின்வரும் செய்யுளால் தெரிவிக்கின்றார்.

"செறிதவச்சம்புகன்றன்னைச்சென்றுகொன்று
செழுமறையோனுயிர்மீட்டுத்தவத்தோனீந்த
நிறைமணிப்பூணணியுங்கொண்டிலவணன்றன்னைத்
தம்பியால்வானேற்றிமுனிவன்வேண்டத்
திறல்விளங்கும் இலக்குவனைப்பிரித்தான்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்
உறைவானைமறவாதவுள்ளந்தன்னை
யுடையோம்மற்றுறுதுயரமடையோமன்றே."

(பெருமாள்திருமொழி. 10, 9.)

எனவே, இந்திய சரித்திரத்தாலும் தமிழிலக்கியத்தாலும் துறவறம் நான்குவருணத்தாரில் அந்தணர் ஒருவர்க்கே அக்காலத்தில் உரியதாகக் கருதப்பட்ட உண்மை நன்குவிளங்குகிறது. புத்த ஜைன மதங்கள் தோன்றுவதற்குச் சரித்திராசிரியர்கள் இதை ஒரு முக்கிய காரணமாக எடுத்துக்காட்டுவர். அம்மதங்களில் துறவு பூணுதல்சிறந்த தருமமாகக் கருதப்பட்டது. "துறவிக்குவேந்தன் துரும்பு" என்னும் முதுமொழிக்கிணங்க, புத்த ஜைன மதங்கள் தோன்றிய காலத்தே துறவிகள் ஏனைய ஆச்சிரமத்தார்களால் பெரிதும் போற்றப்பட்டனர். இம்மதங்கள் தோன்றவே துறவிகளின் கூட்டம் இந்தியா முழுவதும் அதிகமாயிற்று. துறவிகள் பரவியிருந்தது கல்வெட்டுக்களின்வாயிலாக அறியத்தகும். அன்றியும், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழங்காப்பியங்களால்



அம்மதக்கொள்கைகளும் ஒழுக்கங்களும் தமிழ்நாட்டிற் பரவியிருந்தசெய்தி, விசதமாக அறியலாகும்.

புத்த ஜைன மதக்கருத்துக்கள் எதுவும் சங்கப்பனுவல்களிற் காணப்படவில்லை. குறள்நூலிலே அக்கருத்துக்கள் பல காணப்படுகின்றன. அந்தணர்க்கேயுரியதாகப் புராதன இந்துக்கள் கூறிய துறவறத்தைத் திருவள்ளுவர் நான்குவருணத்தார்க்கும் பொதுவாகக் கூறுகிறார். இதைப் பரிமேலழகரும் பாயிரவுரையில் "எல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறமென இருவகைநிலையாற் கூறப்பட்டது" என விளக்கிக் கூறுகிறார். இதுவுமன்றித் திருக்குறளில் ஆங்காங்குப் பௌத்ததருமங்களும் சில கூறப்படுகின்றன. இம்மையில் இசையீட்டுவதையே வாழ்க்கையின் நோக்கமாகக்கொண்ட தமிழர் மறுபிறப்பையும் ஆன்மாவையும்பற்றி அதிகமாக ஆழ்ந்து ஆராயத்தலைப்பட்டது பிற்காலத்தே என்பது தமிழிலக்கியத்தால் இனிது விளங்கும். வீரமும் கொடையுமே ஒருவற்குப் புகழொளிபரப்புமெனக்கொண்ட தமிழரிற் பலர், பிற்காலத்தேதான் துறவறத்தை மேற்கொண்டனர். புத்தமதம் அசோகர்காலத்தேதான் தென்னிந்தியாவிற் பரவ ஆரம்பித்ததால், அதிலிருந்து தமிழ்நாட்டிற் பிரபலமடைவதற்குச் சில நூற்றாண்டுகளாவது ஆயிருக்கவேண்டும். மக்கள் ஒரு புதிய மதத்தைத் தழுவினும் மதத்தின் தருமங்களும் கொள்கைகளும் தடித்து மக்கள் உள்ளத்தேயூறிக் கவிகளிலே யிடம் பெறுதற்கு நீண்டகாலஞ்செல்லும். பௌத்த ஜைனமதத் துறவிகள் தமிழ்நாட்டிலே பரவியிருந்தசெய்தி, சங்ககால இலக்கியத்திற்குப் பிற்பட்ட நூல்களால்தான் விளங்குகிறது. சங்கநூல்களில் இச்செய்திகளும் தருமங்களும் பிரஸ்தாபிக்கப்படாமல், [1]சில கல்வெட்டுக்களிலே ஜைனத்துறவிகள் தமிழ்நாட்டிற் பரவியிருந்தனரென்று பொறிக்கப்பட்டிருப்பதால் அம்மதங்கள் தமிழகத்திற் பரவியது பிற்காலத்தே என்பது விளங்கும். எனவே திருக்குறளும் இக்காலத்தே செய்யப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

1 திருநாதக்குன்றுக் கல்வெட்டிலே இதைக் காணலாகும்.

மத ஆராய்ச்சியில் ஈடுபட்டுழைத்த ரிஸ் டேவிஸ், ஓல்டன்பர்க், மானியர் வில்லியம்ஸ் முதலிய ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் [1]'பௌத்தமதத்திற்கும் இந்துமதத்திற்கும் யாதொரு வேற்றுமையுமில்லை. இரண்டுமதங்களுக்குமுரிய ஆதாரங்களெல்லாம் வடமொழி வேதத்திலேயே இருக்கின்றன. உபநிஷதங்களே புத்தமதத்திற்கு மூலமாயிருந்தன. அவற்றின் கொள்கைகளையே புத்தபிரான் ஒருமதமாக எடுத்துரைத்தார்' எனக் கூறுவர். அது உண்மையென்பதை, இன்றும் என்றும் யாரும் மறுப்பாரில்லை. அக்காலத்து இந்துக்களைப்போல ஆன்மாவையும் பிரும்மத்தையும் பற்றி, வாதமும் விசாரமும் செய்து கழிப்பதைவிட, வாழ்க்கையில் ஒழுக்கத்தைச் செம்மைப்படுத்தி அதன்வண்ணமே மக்களை ஒழுகச்செய்தால் உலகத்தில் துன்பம் குறையுமென்றெண்ணிப் பௌத்தர்கள் தம் தர்மங்களை விளக்கிப் பரவச்செய்தனர். இது கௌதமபுத்தரைப் பின்பற்றியவர்களுக்கும் அக்காலத்திருந்த இந்துகுருமார்களுக்கு மிருந்த பெரிய வேற்றுமையாகும். அன்றியும், அவர் பௌத்த சங்கத்தாருக்குள் ஜாதிபேதமில்லாமற் செய்தனர். பௌத்தர்கள் அக்காலத்து இந்துக்கள்கொண்ட கருத்திற்கு மாறாக நிர்வாணத்திற்குரிய வழி, உயர்ந்தவனுக்கும் தாழ்ந்தவனுக்கும் திறந்துள்ளதெனக் கூறிவந்தார்கள். இவை யாவும் இந்து பௌத்த மதங்களுக்குள்ள வேற்றுமைகளாகும்.

தொல்காப்பியத்தும் இறையனார்களவியற்சூத்திரத்தும் இன்னும் இவைபோன்ற பண்டைநூல்களிலும் பிறப்பைச் சிறப்பாகக் கூறியதுபோல், திருவள்ளுவர் கூறாது, ஒழுக்கத்தையே உயர்வாகக் கூறுகிறார்.

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (குறள். 134.)

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். (குறள். 505)

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (குறள். 972.)

[1] இது நேர் மொழிபெயர்ப்பன்று. அவர்களனைவரும் கூறியதின் சாராம்சமாகும்.



என்ற குறளடிகளாற் பிறப்பையே சிறப்பாகக் கருதவில்லை என்பது நன்கு விளங்கும். இவ்வாறான சான்றுகள் பலவுள. விரிக்கிற் பெருகும். இதன்றித் துறவைப் பெரிதும் புகழ்ந்து சிறந்த அறமாகவும், வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவும், அதை எல்லார்க்கும் பொதுவாகவும் வள்ளுவர் பேசுவது அவர்காலத்துத் தமிழ்நாட்டில் மிக்குப் பரவியிருந்த ஒரு புதிய இயக்கத்தின் சம்பந்தத்தைக் காட்டுகிறது.

புத்த ஜைன மத தர்மங்களைத் திருவள்ளுவர், அம்மதங்கள் தமிழகத்திற் பரவுதற்குமுன்பே உபநிஷதங்களின்வாயிலாக அறிந்திருக்கலாகாதோ எனிற் கூறுதும். தொல்காப்பியர்காலத்திற்குமுன்பே ஆரியர்கள்கூட்டுறவினால் தமிழகத்தில் வருணபேதங்களேற்பட்டுப் பிறப்பினால் உயர்வு தாழ்வு கொள்ளப்பட்டதென்பது தொல்காப்பியத்திற் காணப்படும் பல சூத்திரங்களால் நன்குவிளங்கும். அக்காலத்தே தமிழகத்தே வடமொழி நீதிநூல்கள் வழங்கியிருப்பின் அவைகளைக் கற்க இயலுமாயினும், திருவள்ளுவர்குலத்தை நோக்குங்கால், அவர் வடமொழி வேதத்திலுள்ள உபநிடதங்களை நேரிற் கற்றிருத்தல் இயலாது. குலம்பற்றி அவர்க்கு அந்நாளில் யாரும் உபதேசித்திரார். உபதேசமின்றி உபநிடதங்களின்பொருளைத் தானே நேரிற் கற்றல் இயலாது என்பதை வடமொழிபயின்றோரனைவரும் நன்கறிவர். எனவே, வள்ளுவர்காலத்தில் புத்த ஜைன மதக் கருத்துக்கள் தமிழகத்தே நன்கு பரவியிருத்தல்வேண்டும். அதனால் அவைகளில் ஏற்பவற்றைத் திரட்டித் திருவள்ளுவர் தம் நூலிலே சேர்த்திருக்கவேண்டும்.

## 8. திருக்குறட் பாயிரம்.

அறத்தின் சிறப்பையும் அதைச்செய்யவேண்டிய அவசியத்தையும்பற்றி வேதங்கள் கூறினும், தம் நலங்கருதி வேள்வி முதலியன இயற்றிவந்த புராதனகாலத்தே இந்துக்கள் அதை அத்துணைச் சிறப்பாக எடுத்துப் போற்றவில்லை. பௌத்தமதம் தோன்றிய பிறகே அறஞ்செய்தல் சிறப்பாகவும், மக்கள் வாழ்க்கையிற்

கடைத்தேறுவதற்குச் செய்யவேண்டிய இன்றியமையாத கடமையாகவும் வற்புறுத்தப்பட்டது. இது சங்க இலக்கியங்களிலே ஓரோவழி அருகிக் கூறப்படினும், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்போலச் சிறப்பாக விதந்து வற்புறுத்தப்படவில்லை. புறப்பாட்டு முதலிய நூல்கள் ஈதலைச் சிறந்த அறமாகக் கூறியிருப்பினும், திருவள்ளுவரே இவ்வறத்தை விரிந்த பொருளில் பெய்திருக்கிறார். அறத்திற்குக் கடமை என்று திருவள்ளுவர் பொருள் கொண்டது, குறள்நூலில் நன்குவிளங்கும். அறத்துப்பாலில் இல்லறம் துறவறம் ஆகிய இருவகைநிலைகளினின்றார்க் குரிய கடமைகளையே திருவள்ளுவர் விரித்துக்கூறுகிறார். 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்திலும் இல்லறம் துறவறம் இரண்டிற்கும் பொதுவாய கடமைகளையே வற்புறுத்துகிறார். அறன்வலியுறுத்தல்' நீத்தார்பெருமை-இரண்டையும் பாயிரத்திலேவைத்துக்கூறியிருப்பது மிகவும் சிந்திக்கத்தக்கது. அவ்வாறு வைத்துக்கூறியது, திருவள்ளுவர், வடமொழியாளர் ஜாதிதர்மம், குலதர்மம் என்ற தொடர்களில் ஈதற்பொருளன்றித் தர்மத்திற்குக் கடமையென்ற பரந்த பொருள் கூறியதேபோல், அறத்தைப் பரந்தபொருளிற் கொண்டார் என்பதையும், அறத்தை மிகமிகச் சிறப்பாகக் கொண்டார் என்பதையும் துறவிகளிடத்தே பெருமதிப்புவைத்து அவர்களைத் தெய்வங்களாகப் பாராட்டினார் என்பதையும் நன்கு விளக்கும். துறவிகள் தமிழரால் இத்தகைய நன்மதிப்புப் பெற்றுத் தெய்வத்திற் கொப்பாகப் பாயிரத்திலே வைத்துப் போற்றப்படவேண்டுமானால், அத்துறவிகள் தமிழகத்தே மிக்குப் பரவி அறத்தை மக்கட்கு உபதேசித்திருக்கவேண்டுமென்று தெரிகிறது. இவை யாவும் புத்த ஜைன மதங்கள் தமிழகத்திற் பிரபலமடைந்திருந்த காலத்தேதான், நிகழ்ந்திருக்கவேண்டும். இதனாலும் திருவள்ளுவரைக் காலத்தாற் பிந்தியவரெனக் கருத இடமுண்டு.

## 9. புலாலுண்ணலும் கொல்லாமையும்.

அந்தணர், அரசர், வள்ளல் முதலிய உயர்மக்களனைவருமே புலாலும் கள்ளும் உண்டு வாழ்ந்ததாகப் பண்டைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. அந்தணரெனக் கொள்ளப்படும் கபிலர் நக்கீரர் முதலியோர் தம்மை ஆதரித்த அரசர்களை, மகளிர் கொடுத்த கள்ளுண்டு நீண்டகாலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

> "யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
> பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
> மொண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
> தாங்கினி தொழுகுமதி யோங்குவாண் மாற" (புறம். 58.)

என்ற அடிகளால், அரசரை இவ்வாறு வாழ்த்தும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. புலாலுண்ணும்வழக்கம் அக்காலத்திருந்ததை

> "மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்" (புறம். 113.)

முதலிய பாடல்களால் அறியலாகும். புலாலும்கள்ளும்உண்ணலைப் பழந்தமிழர்சமுதாயத்திலே யாரும் தகாதசெயலாகக் கருதவில்லை. கடைச்சங்கப்புலவர்களுக்குத் திருவள்ளுவர் முற்பட்டவராகவோ சமகாலத்தவராகவோ இருந்திருப்பின், தம்நூலில் அவைகளைத் தகாத மிகஇழிந்த பாவச்செயலாகப் பழித்துக் கூறியிருக்கமாட்டார். புத்த ஜைன மதக் கொள்கைகள் தமிழகத்துப் பரவிய காலத்தேதான் கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை முதலியன சிறந்த அறங்களாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். திருவள்ளுவர் இவற்றினைப் பலவிடங்களில் வற்புறுத்திக்கூறுகிறார். கொல்லாமை, புலாலுண்ணாமை என்று ஒன்றனையே இரண்டதிகாரங்களாக வகுத்துக்கூறியதும் அவர் காலத்தாற் பிற்பட்டவர் என்பதைப் பின்னும் வலியுறுத்தும்.

## 10. ஆகமநூல்களின் தொடர்கள்.

வடமொழி ஆகமநூல்கள், தமிழகத்தே தேவாரம் பாடியவர்களுக்குச் சிறிதுகாலத்திற்குமுன் பரவியிருக்கவேண்டுமெனப் பலர் கருதுகின்றனர். ஆகமநூற்கருத்துக்கள் தேவாரங்களில் அருகியும் திருவாசகத்திற் பெருகியும் வருதலையே, மாணிக்கவாசகர்காலத்தைக் கூறச் சான்றாகவும் சிலர் காட்டுவர். திருக்குறளில் ஆகமநூற்கருத்துக்கள் சொற்றொடர்கள் முதலியன அருகிவருகின்றன. 'ஐந்தவித்தான், எண்குணத்தான்' முதலிய குறட்சொற்றொடர்கள் அருகனையே குறிக்குமெனக்கொண்டு வள்ளுவரை ஒருசாரார் ஜைனரெனக் கூறுவர். அது எல்லாக்கடவுளர்க்கும்பொதுவான குணமென்று அதை ஒருசாரார் மறுத்துக்

கூறுவர். ஜைனமதப்பற்றுடையோர் கொண்டபடி அத்தொடர்கள் அருகனைக்குறிப்பினும், இதுபோன்ற தொடர்கள் பல திருவள்ளுவர் காலத்தாற் பிற்பட்டவர் என்பதையே யுணர்த்தும். அன்றிப் பரிமேலழகர்கூறியபடி சைவாகமத்திற் கூறப்பட்ட எண்குணங்களைக் கண்டு வள்ளுவர் கூறியிருப்பினும், காலத்தாற் பிற்பட்டவர் என்ற கொள்கையையே வலியுறுத்தும். இவ்வாறே பலரும் பல தொடர்களை எடுத்துக்காட்டுவர். அவற்றுள் பொருந்துவன சில; பொருந்தாதன சில.

இதுகாறும் கூறிய காரணங்களால் திருவள்ளுவர் கடைச் சங்கப்புலவர்களுக்குக் காலத்தால் மிகவும் பிற்பட்டவர் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. அது எவ்வாறாயினும் தக்கசான்றுகளின்றி வெற்று ஊகங்களினாலே, ஒருகொள்கையை நிறுத்த இயலாது. தற்பொழுது நம் தமிழகத்திற் புலவர்களைக் காலத்தால் ற்பட்டவர் எனக் கொள்வோரே, தமிழிற் பற்றுடையார் என்றும், ற்பட்டவராகக்கொள்வோர் வடமொழிப்பற்றுடையவர் என்றும் ரு தவறான எண்ணம் பலருள்ளத்தே பதிந்துகிடக்கிறது. ஒரு ாரார் தமிழ்ப்புலவர்களைக் காலத்தால் முந்தியவராக்கினாலன்றி வர்பெருமை விளங்காதெனக் கருதித் தம் ஆராய்ச்சியை அதற் கற்றவிதமாக மாற்றுகின்றனர். மற்றுமொருசாரார் தமிழ்ப் லவர் பலவரை எவ்வாற்றானும் பல ஆரியநூலாசிரியர்களுக்குப் ற்பட்டவராக்கவேண்டுமென்ற நோக்கத்துடனே காலத்தை ராய்கின்றனர். இவ்வாறுசெய்வோர் தத்தமக்கு ஒரு மொழி லும் ஒருநூலிலுமுள்ள பற்றைக் காட்டுபவராவரேயன்றிச் சரித் ரவுண்மை துலக்குபவராகார். எவற்றினும் உண்மைகாணவேண்டு மன்ற பெருநோக்குடன் நடுவுநிலையிகவாது, ஆராய்வதே றிவுடையோர்க்கழகாம்.

'எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.'

ஆர். நரசிம்ஹன், B.A. (Hons.,
தலைமைத்தமிழாசிரியர்,
நாஷனல்ஹைஸ்கூல்,
ரிஷிவேலி P. O
சித்தூர்ஜில்லா.



### பாங்கி வலம்புரிகேட்டு அவன் வரவறிவுறுத்தல்.

292. பந்தன மாமுலை யாயுள மாழ்கிப் பதைப்பதென்னீ
இந்தனல் கங்கையி னேந்துஞ் சிராமலை யீசர்க்கன்பர்
சந்தன நேர்ந்துன் மனங்குளிர்ந் தாரத் தனங்கொணர்ந்து
வந்தனர் வந்தன ரென்றே யொலித்த வலம்புரியே. (கக)

### வலம்புரி கிழத்தி வாழ்த்தல்.

293. நம்பு மவர்க்கருள் செய்வோர் சிராமலை நாதரொளி
பம்பு மருளென நாளும் விளங்குக பாரிலிவண்
வெம்பு மெனதுயிர் காத்திட வேண்டி விரைந்தணைவார்
தம்புகழ் போலவர் தேர்முன மார்க்குந் தனிச்சங்கமே. (௨௦)

### தலைவனைப் பாங்கி நினைத்தமை வினாதல்.

294. இனத்தா மரைமலர் மேலன முட்டை யெனவளையை
நினைத்தா தரவு புரிபுன லூரிடை நீரொருநாட்
சினத்தால் வருநஞ்ச முண்டோன் சிராமலைத் தேனையன்பால்
மனத்தா மரையுற வைத்ததுண் டோசொலு மன்னவரே. ()

---

292. பந்து அன்ன - பந்தை ஒத்த. இந்து அனல் கம் கையின் ஏந்தும் - சந்திரனையும் கனலையும் முறையே தலையிலும் கையிலும் தாங்குகின்ற; நிரனிறை; கம் - தலை. சந்தனம் நேர்ந்து - சந்தனத்தை ஒத்து. வலம்புரி ஒலித்த; ஒலித்த - ஒலித்தது; தொகுத்தல்விகாரம்.

293. பம்பும் - பரவிய. பாரிற் சங்கம் விளங்குக.

294. அனம் - அன்னப்பறவை. வளை - சங்கம். வளையை முட்டையென்றுநினைத்து. சினத்தால் - கோபத்தோடு. தேனென்றது தலைவியை. மலைத்தேனைத் தாமரைமலரில் வைத்ததுண்டோவென்பது ஒரு நயம்.

### தலைமகன் நினைத்தமை செப்பல்.

295. விறப்பு மிருமலர்க் காவினுங் கானினு மெல்லியலாள்
சிறப்பு மிகவென துள்ளத்து ளார்தலிற் சேயிழையாய்
பிறப்பு மிறப்பு மிகந்தோன் சிராமலை பேணினர்போல்
மறப்பு நினைப்பு மிகந்தவ னாயென்று மன்னுவனே. (உஉ

### பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமைகூறல்.

296. தேடிய மாலயன் காணா தயரவென் சிந்தையுள்ளே
ஆடிய கூத்துடை யெம்மான் சிராமலை யன்பவுனைக்
கூடிய காவுமுன் னாடிய வாவியுங் கூறிமின்னாள்
வாடிய வாட்டந் தவிர்த்தே னினதருள் வாய்மைகொண்டே.

## கக. வரைவுமலிவு.

### காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல்.

297. கலவா நமைத்தடுத் தாண்டோன் சிராமலைக் காரளிபோற்
சுலவா வொளிர்விழி யாயுன் முலைவிலை சொல்லவன்பர்
உலவா நிதிமக மேருவென் றிம்பரி லும்பரெண்ணப்
பலவா ரணங்களின் மேற்கொண் டிறுத்தனர் பார்த்தருளே.

---

295. விறப்பு - செறிவு. பிறப்பும் இறப்பும் இகந்தோன்: "எல்லா முடையா னிறத்தல் பிறத்தலிவை, இல்லானென் றெல்லாரு மேத்தெடுப் பான்" (திருவிடைமருதூருலா, 461.) இச்செய்யுள், "புறந்தாழ் குழலுமை பங்காளர்வெங்கைபுரத்தரயன், பறந்தாலு மென்னென் றிருக்கின்ற வேணிப் பரமர் தமைத், துறந்தார் மனமென வேங்கொடுங் காட்டிச் சுரத்திடை நான், மறந்தா னினைத்தலு முண்டுபொன் னேயுங்கள் வஞ்சியையே" (திரு வெங்கைக்கோவை, 282) என்பதோடு ஒத்த பொருளுடையது.

296. தேடிய...எம்மான்: "தேடு மரியயற் கெட்டா திருத்துஞ்சிற் றம்பலத்தே, ஆடும் பரமர்" (ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்பாடல்.) கா - சோலை. முன் ஆடிய.

297. சுலவா - சுற்றி. இம்பர் - இவ்விடத்தில்; இம்பரில் இறுத்தனர்



### காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்.

298. தன்னைப் பரமென யானுணர்ந் துய்ந்திடத் தானருளால்
என்னைச் சிவமெனச் செய்தோன் சிராமலை யேத்துமன்பர்
பொன்னைப் புயலிற் பொழிந்திடி னாளைப் புணர்ப்பர்மணம்
அன்னைக் குளங்குளிர் வாகு மினியின்ப மார்தரவே. (உ)

### பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை காதலிக்குணர்த்தல்.

299. பூதங் கரணம் பொறிபுல னீயன்று போதனென்றே
பேதந் தவிர்த்தெனை யாண்டோன் சிராமலைப் பெண்ணமுதே
நாதந் தருகடல் போலெதிர்ந் தார்நமர் நம்மிறையை
வேதந் தருமுறை யானின் மணஞ்செயும் வேட்கையுற்றே. ()

### தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல்.

300. துடியா ரிடையுமை பாகன் சிராமலைத் தோன்றனம்மைக்
கடியார் தரவியம் வாரியி னார்த்துக் கறங்கக்கண்டு
கொடியா ரலரு மதனலர் வாளியுங் கூர்பசப்பும்
இடியார் நமதனை வெஞ்சொலு மின்றுட னேகுநெஞ்சே. (ச)

### தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

301. பொன்னியல் வார்சடை யெம்மான் சிராமலை போற்றுமன்னா
பன்னிய மாண்கலை யாய்ந்துணர் நீயும் பரிவுடனெம்
மின்னிய லாரிடை யாளுமெந் நாளும் விளங்குருவம்
மன்னிய வேளு மிரதியும் போலிங்கு வாழியவே. (ரு)

---

298. புணர்ப்பர் தமரென ஒருசொல் வருவிக்க. ஆர்தரக் குளிர் வாகும்.

299. அன்று: பன்மைக்கும் வரும். (நேமி. வினைமரபு, 7.) போதன்-அறிவுமயமாக உள்ளோன். நாதம்-ஒலி. நமர் வேட்கையுற்று நம் இறையை எதிர்ந்தார்; எதிர்ந்தார் - ஏற்றுக்கொண்டார்.

300. துடி - உடுக்கை. கடி - கலியாணம். இயம் - வாத்தியம். கொடியார் அலரும் - கொடுமையையுடைய அயல்மகளிர் கூறும் பழிமொழியும். கூர் பசப்பும் - மிக்க பசலையும். இடி ஆர் - இடியை ஒத்த.

301. உருவம் மன்னிய வேள்-உருவம் நிலைபெற்ற காமன்; "உருவளர் காமன்" திருச்சிற். 1.

மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்.

302. பொன்மண வாளனும் வேதனுந் தேவரும் போற்றவருள்
நன்மண மார்மலர்த் தாளோன் சிராமலை நாடுநண்பா
நின்மண நாடிநின் றன்மண வாட்டி நெடிதணங்கைப்
பன்மண மார்மலர் தூவும் பராநிலை பார்த்தருளே. (சு)

பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல்.

303. பன்ன வரும்புக ழெம்மான் சிராமலைப் பாலணங்கை
அன்ன நடைமயி லாண்மணம் வேண்டி யருளுளத்து
மன்ன மலர்பலி தூவிநின் றேத்தி வணங்கக்கண்டேன்
என்ன வதிசயஞ் சொல்வே னகமகிழ் வெய்தியதே. (எ)

## ௨0. அறத்தொடுநிற்றல்.

கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.

304. வாரித் திரைமுத்தின் வண்டலம் பாவையை மாற்றியவோ
வேரிக் குழலனை தானுனைச் சீறி வெகுண்டனளோ
நாரிக் கொருபுற மீந்தோன் சிராமலை நன்னுதலாய்
பூரித் திடுமுலைக் காரங்கண் ணாலெவன் பூட்டுவதே. (க)

தலைமகள் கலுழ்தற்குக் காரணங் கூறல்.

305. புயங்கா பரணத்த னெம்மான் சிராமலைப் பூங்குழலாய்
நயங்கா தலித்தன்று வேழமட் டாவியை நல்கியென்னை
முயங்கா தரவன்பர் தாமென் றுயிலினை முற்றுமொழித்
தயங்கா தகன்றத னால்விழி நீர்வெள்ள மோங்கியதே. (உ)

302. பொன் - திருமகள். மணவாட்டியென்றார் முன்னமே காந்தருவ மணம் நிகழ்ந்தமைபற்றி. அணங்கை - துர்க்காதேவியை. பராம் நிலை - வழிபடும் நிலைமையை.

303. பன்ன அரும்புகழ். உளம் - அணங்கின் உள்ளம். மலரையும் பலியையும் தூவி. அகம் - என் மனம்.

304. முத்தின் வண்டலம் பாவை - விளையாட்டுக்குரிய முத்தாலாகிய பாவை. திரை மாற்றியவோ. ஆரம் - முத்தமாலை; கண்ணீர்த்துளியின் தொடரை ஆரமென்றார். என் அழுகின்றாயென்பது கருத்து.

305. புயங்கம் - பாம்பு. முயங்கிய ஆதரவையுடைய அன்பர். உயங்காது - என்னைப் பிரிதலால் தாம் வருந்தாமல்.



தலைமகன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல்.

)6. அணங்கிற் கிடங்கொடுத் தோன்வாழ் சிராமலை யாயிழைமுன்
வணங்கிக் கழிக்கரை வாழு மணங்கினை வாழ்த்தியன்பர்
இணங்கித் தெளித்த தெளிவா லகல்கில ரென்றிருந்தேன்
பிணங்கிப் பொழிகண்ணி னீரார தாக்கிப் பிரிந்தனரே. (ங)

தலைவன் இகந்தமை இயம்பல்.

)7. கையார் மழுப்படை யெம்மான் சிராமலைக் காதலர்முன்
செய்யா தனசெய்து தேற்றிய யாவருந் தேர்கிலரென்
றெய்யா தகன்றன ராற்பெரி யோர்க ளியம்புமொழி
மெய்யா வினியெண்ண லாமோ வுலகினின் மெல்லியலே. (ச)

பாங்கி இயற்பழித் துரைத்தல்.

)8. செல்லே னினையொரு போதும் பிரிந்தென்று தேற்றியசூள்
அல்லேய் குழலுமை பாகன் சிராமலை யாருமெழில்
வல்லேய் முகிழ்முலை யாய்நீ வருந்த மறந்துமனம்
கல்லே யெனவகன் றாரவர் போலெவர் காதலரே. (ரு)

தலைமகள் இயற்பட மொழிதல்.

)9. தண்ணா ரமுத கிரண மருந்து சகோரமொன்றை
எண்ணா தருந்த வெனக்குந் தணந்த விறைவர்புயக்
கண்ணார் தருமின்ப மன்றியொன் றின்று கருதினென்றும்
பண்ணார் தருமொழி பாகன் சிராமலைப் பான்மொழியே. (சு)

306. ஆயிழை: விளி. கழிக்கரை வாழும் அணங்கு - கடற்றெய்வம்; )காடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வம்" (அகநா. 110: 4); "கடற்றெய்வங் ட்டிக்காட்டி" சிலப். கானல். 7.

307. பிறர் செய்யாத சபதங்களைச் சொல்லித் தேற்றியவற்றை. ்யாது - அறியாமல்.

308. பிரிந்து செல்லேனென்று. வல் - சூதாடுகருவி. மனம் கல்லே ன்று கூறும்படி அகன்றார்; "கணவரவர் நெஞ்சது கருங்கலல வோவென், னர்முலையில் வந்துவிளை பொன்னையுரை யீரே" அழகர் கலம்பகம், 65.

309. சகோரப்பறவை நிலவையன்றி வேறொன்றை அருந்த எண்ணாது; துபோல எனக்கும் இறைவர் தரும் இன்பமன்றி வேறொன்றும் இல்லை; து எடுத்துக்காட்டுவமையணி.

தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல்..

310. நீளுங் கயல்விழி பாகன் சிராமலை நேயரெம்பால்
நாளுந் தவறு புரிந்திலர் நீங்கலி னல்வெகுளேல்
ஆளுங் குலதெய்வ மேயென்று போற்றி யருளவர்பால்
மூளும் படிபலி தூவுது மேவுது மொய்குழலே. (எ)

தலைவி இல்வயிற்செறித்தமை சொல்லல்.

311. ஆனே றுயர்த்தவ னெம்மான் சிராமலை யாயிழையாய்
மானே நொதுமலர் தூற்று மலரை மதித்துடலம்
தானே பசந்த பசப்பையு நோக்கித் தளர்ந்தனையென்
தேனே யினிப்புறம் போகலென் றாளென்ன செய்குதுமே. ()

செவிலி கனையிருள் அவன் வரக் கண்டமை கூறல்.

312. இரவிற் குறியிடை யன்பர்வந் தெய்திட வெம்மனை தான்
கரவிற் கொளித்தொரு கள்வனின் றானென்று காய்ந்துரைத்தாள்
அரவிற் றுயின்முகில் போற்றுஞ் சிராமலை யண்ணல்பொற்றாள்
பரவித் தொழுது பணிந்தென்று மேத்தும் பணிமொழியே. ()

செவிலி எறிவளை வேற்றுமைக்கு ஏது வினாதல்.

313. ஆனஞ் சுகந்தரு ளெம்மான் சிராமலை யாயிழைக்குப்
பானஞ் செனத்தனம் பீர்பூப்ப நீர்கண் பரிந்தளிப்ப
மோனஞ் செறிந்தயர் வாரவென் காரண மோமறலிக்
கோனஞ் சயில்விழி மின்னே மறைவிட்டுக் கூறுகவே. (க0)

---

310. புரிந்திலராய் நீங்கினமையின். அவர்பால் அருள் மூளும்படி. பலிதூவல்: "காவன் மன்னர் கடைமுகத் துகுக்கும், போகுபலி வெண்சோறு போலத், தூவவும் வல்லனவன் றூவுங் காலே" புறநா. 331: 11-3.

311. ஆயிழையாயென்றதும் மானே யென்றதும் தோழியை; அடுக்கிய விளிகளாற் காதற்சிறப்பு விளங்கும் (திருச்சிற். 47, பேர்.) அனை-செவிலி. அனை புறம்போகாதே என்றாள்.

312. எம்மனை - தாய். கரவிற்கு - திருட்டிற்கு. முகில் - திருமால்.

313. ஆன் அஞ்சு - பஞ்சகவ்வியத்தை. பால் நஞ்சென. பீர் - பசலை. அயர்வு ஆர - அயர்ச்சியை அடைதற்கு. மறலிக்கோன் அஞ்சுதற்குரிய.



வெறி விலக்கல்.

314. தகரக் குழன்மொழி மான்மாற் றிடுமென்று தக்கபலி
நுகரக் குறுகிக் குறிபல நாடிமின் னோய்தவிர்ப்பான்
மகரக் குழைமங்கை பாகன் சிராமலை வாழ்முருகா
பகரக் குவலயத் தெங்ஙன மேகிப் படித்தனையே. (கக)

வெறி விலக்கியவழிச் செவிலி தோழியை வினாதல்.

315. நுமக்குக் குலதெய்வ மாகிய வேலனை நாடுமவர்
தமக்குத் தனித்துணை யாங்கும ரேசனைத் தாழ்ந்துதொழா
துமக்குத் தகாதென வெம்மான் சிராமலை யுன்னலர்போல்
எமக்குத் தகுங்குறி யீண்டெவ னீக்கிய தேந்திழையே. (கஉ)

பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

316. எளியார் துதிக்கரு ளெம்மான் சிராமலை யேந்திழைதேன்
துளியார் மலர்களின் மேலாய் மணமிகச் சூழுமுன்றன்
ஒளியார் விழிமலர் போலுமென் றோரிறை யுற்பலமொன்
றளியார் தரநின் மகட்களித் தானன்பி னன்றனையே. (கங)

புனறரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.

317. காரா ரறல்குழ லெக்கர் நிதம்பங் கலைநுரைகை
வாரா ரலைமுலை புற்புத மார்சுழி வாய்ந்தவுந்தி
ஏரார் தருபொன்னி பொன்னியை யீர்ப்ப வெடுத்தளித்தான்
சீரா ரனையென்ன லெம்மான் சிராமலைத் திண்புயனே. (கச)

---

314. தகர் - ஆடு. அக்குழன்மொழி மால் - தலைவியின் மயக்கத்தை. பகர - சொல்லுதற்கு.

315. எவன் - யாதுகாரணம்பற்றி. தகாதென நீக்கியது எவன்?

316. சூழும்: முற்று. உற்பலம் - நீலோற்பல மலர். அன்பின் அன்று அளித்தான்; அன்று தொடங்கி அவனையே நினைத்து வருந்துகின்றாளென்பது எச்சம்.

317. அறல் - கருமணல். கை அலை. புற்புதம் - நீர்க்குமிழி. பொன்னி-காவிரி. காவிரிநதி ஒரு பெண்ணாக உருவகம் செய்யப்பட்டது. பொன்னியை-பொன்போன்றவளாகிய தலைவியை. அனை - அன்னையே. திண்புயன் அளித்தான்.

**களிறுதரு புணர்ச்சியால் அறத்தோடு நிற்றல்.**

318. தந்தி யடர்த்துப் புனமுற வோரிறை சார்ந்ததனைச்
சிந்தி யிடுமுனஞ் சேர்ந்தணைத் தாணந் திருவவனை
அந்தி மதியணி தென்கயி லாய ரருள்குகனை
முந்தி யவண்வள்ளி சென்றே தழுவு முறையினன்னே. (கரு)

**தலைவியின் மெய்வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினவல்.**

319. யானென்ன செய்குவ னென்னு ரமுதனை யாள்வெருண்டு
மானென்ன நோக்கவும் பீர்முலை பூப்பவு மான்மிகவும்
தானென்ன வுற்ற துரையா யெனக்கின்று சங்கையறத்
தேனென்ன வார்மொழி பாகன் சிராமலைச் சேயிழையே. (கசு)

**செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தோடு நிற்றல்.**

320. தேனார் குதலைத் திருந்தா மொழிநின் றிருவனைய
மானு ளரும்பு மலர்வாச முற்றென மையன்மிக
ஆனு முதுக்குறை வுற்று ளொருவனை யாதரித்துக்
கூனார் பிறையணி யெம்மான் சிராமலைக் கோமளமே. (கஎ)

## உக. உடன்போக்கு

**பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.**

321. மெய்ய ருளநிறை யெம்மான் சிராமலை மேவுமெமர்
பொய்ய ருளநிக ராங்குழ லாளிணைப் பூண்முலைக்கு
வைய முழுதும் விலையாக நல்கினும் வாங்கலரால்
ஐய வணங்கைநின் னூர்க்கன்பி னூற்கொண் டகன்றருளே.

---

318. தந்தி-யானை. தந்தி புனத்தில் அடர்த்து உற. ஓரிறை அதனைச் சிந்தியிடுமுன்னம் நம் திரு அவனைச் சேர்ந்து அணைத்தாள். அவண்-வள்ளி மலையின்கண். முறையின் அணைத்தாளென்க; "அவ்வேலையில் வள்ளி" (கந்த. வள்ளியம்மைதிருமணப். 112) என்னும் செய்யுளைப் பார்க்க. அன்னே - அன்னையே.

319. அமுதனையாளென்றது தலைவியை. மால் - மயக்கம். தான்: அசைநிலை. என்ன உற்றது - என்ன துன்பம் உற்றது. எனக்கு இன்று சங்கை அற உரையாய்.

320. குதலையையும் மொழியையுமுடைய மானுளென்றது தலைவியை. அரும்பு மலர் வாசம் உற்றென - அரும்பு, மலருக்குரிய வாசனையைப் பொருந்தினாற்போல. முதுக்குறைவு - பேரறிவு. ஒருவனை ஆதரித்து முதுக்குறைவு உற்றாள்.

321. எமர் வாங்கலரால்.



அணி:— மதுகர நிகரங்களின் ரீங்காரத்தொனியிலே மங்கலமுழவின் றன்மை சம்பாவிக்கப்படுதலால் இப்பாட்டுத் தற்குறிப்பேற்றவணியாம். இதனிலக்கணமும் வடமொழிப்பெயரும் முன்னே சொல்லப்பட்டன. (கசு)

17. இலஞ்சியி லுலக மாகுமொண் பராக
மேந்திய சரோருகத் தாலும்
நலந்திகழ் மார்பிற் றிருமங்கை கொங்கை
நண்ணறுங் கலவையி னாலும்
பொலங்கழ லிணையின் மறைமல ராலும்
பொலங்கொடி வாசித னாயும்
வலம்பெறு நெடுமா னின்குழன் மாலை
வணங்கிய முடிகொடு வகிக்கும்.

பதவுரை:—பொலங்கொடி - அழகிய பூங்கொடிபோன்றவரே!; வலம் பெறுநெடுமால் - வெற்றி அல்லது சர்வசக்தியையுமுடைய திருவிக்கிரம ரூபியான அழகியமணவாளன்; இலஞ்சியில் - திருநாபியில்; உலகமாகும் ஒண்பராகம் - அகிலாண்டங்களாகவும் பரிணமிக்கத்தக்க ஒள்ளிய மகரந்தங்களை; ஏந்திய சரோருகத்தாலும் - வகித்துக்கொண்டிருக்குஞ் செங்கமல மலரினாலும்; நலந்திகழ்மார்பில் - அழகுவிளங்குகின்ற திருமார்பினில்; திருமங்கைகொங்கைநண் - பெரியபிராட்டியாரது திருமுலைத்தடங்களிலணிந்துள்ள; நறுங்கலவையினாலும் - நல்ல வாசனைமிகுந்த சந்தனக்குழம்பினாலும்; பொலம் கழல் இணையில் - அழகிய வீரகண்டையணிந்த திருவடித்துணைகளில்; மறைமலராலும் - மந்திரபுஷ்பத்தினாலும்; வாசிதனாயும் - வாசனையுடையவனாகச் செய்யப்பட்டிருந்தபோதிலும்; நின் குழல்மாலை - தேவரீர் திருக்குழற்கற்றையிற் சூடிக்கொடுத்தருளிய திருமாலையை; வணங்கிய முடிகொடு - வணங்குதலைப்பெற்ற திருவபிஷேகத்தினாலே; வகிக்கும் - தாங்காநிற்கும். எ-று.

கருத்து:—சகலவேதங்களாலும் சர்வகந்தனெனக் கொண்டாடப்படும் திருவரங்கமன்னனார் நாபீகமலம் கமலாசனையின் தனசந்தனம் முதலியவற்றாலே வாசனையூட்டப்பட்டவனாயிருந்தும் நாய்ச்சியார் சூடிக்கொடுத்த திருமாலையிலுள்ள திவ்வியபரிமளத்திலே போர விருப்புடையனாய் அம்மாலையைத் தலைவணக்கத்தோடு பெற்று வகிக்கிறானென்பதாம்.

விசேடக்குறிப்பு:— இலஞ்சி-கொப்பூழ். உலகு அண்டத்துக்குச் சினையாகுபெயர். உலகமாகுமொண்பராகமென்றது, நாபீகமலத்துள்ள ஒவ்வொரு

பூந்துகளும் ஒவ்வோரண்டமாகப் பரிணமிக்கின்றதென்னும் பகவானுடைய விராட்சொரூபத்தின் பெருமை விளக்கியவாறும். மறை - மந்திரம்; மறைக்கப்படுவது மறையெனச் செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டது. மந்திரம் வேதத்தின் ஓர்பாகமாகலின் முதலாகுபெயருமாம். மறைமலர் என்றது புருடசூக்தாதி மந்திரங்களைக்கொண்டு அர்ச்சிக்கின்ற மலர்களை; மந்திரபுஷ்பமென்பதுமிது. இது திருவாராதனக்கிரமத்திலொன்று; "இந்திரனோடு பிரமனீசனிமையவரெல்லாம், மந்திர மாமலர் கொண்டு" என்பது பெரியாழ்வார்திருமொழி. பொலங்கொடி - உவமையாகுபெயர்; அண்மைவிளி; பொலம் என்பது பொன்னையுங் குறிக்கும். "பொன்னென் கிளவி யீறுகெட முறையின் - முன்னர்த் தோன்றும் லகார மகாரம் - செய்யுண் மருங்கிற் றொடரிய லான" என்னும் விதிப்படி பொன் என்னும் பலபொருளொருசொல் பொலமெனவாயிற்றென்ப.

செவிக்கினியதாய்ச்செல்லும் மெல்லிய இசையுடன் கூடியிருத்தலால் இப்பாட்டு ஒழுகிசையென்னுங் குணமுடையதாம். இதில் ஆவியாற்கருதப்பட்டபொருள் வெளிப்படையாய் விரைவிற் புலப்படுதலுண்மையில் தெளிவு என்னுங் குணமுடையதுமாகும். இவற்றின் இலக்கணம்முதலிய முன்னமே சொல்லப்பட்டன.

**அணி:**—'வலம்பெறுநெடுமால் வணங்கியமுடிகொடு வகிக்கும்' என்றதனால் திருவரங்கமன்னனுருக்கு மற்றையபொருள்களிற்காட்டிலும், நாய்ச்சியார் சூடிக்கொடுத்தமாலையிலே மிகவும் ஆர்வமுடைமை விளங்குதலாலே மற்றையவற்றைக்காட்டிலும் சூடிக்கொடுத்தமாலைகளுக்குத் திவ்யபரிமளமுடைமை தெரிதலாலே இப்பாட்டுத் தொனியாலே வந்த வேற்றுமையணியாம். "ஓதிய பொருள்களு ளொன்றுயர் வுடைத்தென், றறைவது வேற்றுமை யணியெனப்படுமே" என்பர் சந்திராலோகநூலார். இதனை வடநூலார் வியதிரேகாலங்காரமென்பர்.

(கஎ)

18. ஓங்குமிவ் வரங்கத் துத்தம னுன்ற
னுத்தரீ யத்தையுங் குழலிற்
பாங்குறச் சூட்டிப் பரிமள மூட்டிப்
பரிந்தருள் பசுந்தெரி யலையும்
வீங்குசீர்க் கோதா யுத்தமாங் கத்தின்
மிசைமிலை தலிற்பெரும் பாலும்
தாங்குமங் களநீள் செல்வமா முடியைத்
தாங்கிடுந் தகைமைசார்ந் தனனால்.



**பதவுரை:**—வீங்குசீர்க்கோதாய் - யாவரினும் மேலான சிறப்புவாய்ந்த நாய்ச்சியாரே!; ஓங்கு - ஞானசக்தியாதிகுணங்களா லெவரினு முயர்ந்த; இ அரங்கத்து உத்தமன் - இந்தத் திருவரங்கமன்னனார்; உன்றன் - தேவரீருடைய; உத்தரீயத்தையும் - திருமுலைத்தடங்களிற் புனைந்துதந்த உத்தராசங்கத்தையும்; குழலில் - திருக்குழற்கற்றையில்; பாங்கு உற - செவ்வையாக; சூட்டி - அணிந்து; பரிமளம் ஊட்டி - மிக்க வாசனையுறும்படிசெய்து; பரிந்து அருள் - விருப்பொடுகொடுத்த; பசுந்தெரியலையும் - செழுமையான மலர்மாலையையும்; உத்தமாங்கத்தின்மிசை - திருமுடியின்மேல்; மிலைதலில் - அணிந்துகொண்டதனாலேதான்; பெரும்பாலும் - மிகவும்; தாங்கு - சகல புவனங்களையும் பரிபாலனஞ்செய்தற்குரிய; மங்கலம் - சுபகரமான; நீள் - நீண்ட; செல்வமாமுடியை - பரமைச்சுவரிய சூசகமான திருவபிடேகத்தை; தாங்கிடும் - வகிக்கும்; தகைமை - மகாதிகாரமாகிய பெருமையை; சார்ந்தனன் - அடைந்தனன் எ-று. ஆல். அசை.

**கருத்து:**—நாய்ச்சியா ருடுத்துக்களைந்த நன்பீதகவாடையையும் சூடிக்கொடுத்த துழாய்த்தொடையலையும் பிரீதிபூர்வகமாகச் சிரசாவகித்தலாலே திருவரங்கச்செல்வனார் மிகவும் சௌபாக்கியசம்பத்துக்குச் சார்வபௌமனாகத் திருமுடிபுனைதற்குரிய மகாதிகாரத்தைப் பெற்றனரென்பது.

**விசேடக்குறிப்பு:**—ஓங்கு - வாத்சல்சாதி குணகணங்களால் எவரினுமுயர்ந்த என்றுமாம். இத்திருவரங்கத்துத்தமனெனச் சுட்டியது சமரபூபாலனென்னும் ஆசனத்தில் நாய்ச்சியாருடன் எழுந்தருளியிருத்தலாலே. உத்தமன் என்றது, உயர்வறவுயர்ந்தவனென்றபடி; புருஷோத்தமனென்றுமாம். உத்தரீயமென்றதற்குக் "குங்குமமப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து வளர்ந்த திருமுலைத்தடங்களின்மேற் புனைந்த உத்தராசங்கமென இசையெச்சமாக விரித்துப் பொருள்கொள்க. அல்லது திருக்குழற்கற்றையிற் போலே யியற்கையாயமைந்த திருமேனியினது திவ்யபரிமளத்தாலே பரிமளிதமாயிருக்கிற உத்தரீயமென விரித்துப் பொருள்கொள்ளலுமாம். வீங்குசீர் என்றது, "கோதைகுழற் சுற்றுத தாரணியார்"! என்று எம்பெருமானைக் கொண்டாடும்படி யெவற்றினுமுயர்ந்த சிறப்புடைமையை. அங்கங்களிலெல்லா முயர்ந்ததாதலிற் திருமுடி உத்தமாங்கமெனப்பட்டது. தாங்குதல் - காப்பாற்றுதல். நீள்முடியென்றதற்கு - சர்வாதிகத்வ சூசகமான நீண்டமுடியென் றர்த்தமருளிச்செய்வர் பூர்வாசார்யர்கள். தகைமை - தகுதியான அதிகாரம். பெரும்பாலுமென்றது, ஸ்ரீய:பதித்வாதிகளும் சிறிது காரணமாயிருத்தலுமெனக் காட்டுதற்கு.

இப்பாட்டு, கவியாற் கருதப்பட்டபொருள் வெளிப்படையாய் விரைவில் விளங்குதலால் தெளிவென்னுங் குணத்தைச் சேர்ந்ததாகும்.

அணி:—திருவரங்கமன்னனுருக்கு இயல்பாகவேயமைந்துள்ள தாங்குமங்கள நீள் செல்வமாமுடியைத் தாங்கிடுந் தகைமைக்கு ஏதுவாகாத நாய்ச்சியார் தனோத்தரீயத்தையும் சூடிக்கொடுத்த மாலையையும் சிரசாவகித்தலில் ஏதுத்தன்மை சம்பாவிக்கப்படுதலாலே இப்பாட்டு ஏதுத்தற்குறிப்பேற்றவணியாம். (கஅ)

19. சரதமா மறைக ளுயர்ந்ததம் முடியாற்
சருவகந் தன்னென வெவனைப்
பரவுமன் போடு பகர்ந்திடு மந்தப்
பசுந்துழாய் முகுந்தனும் மன்றல்
விரவுநின் குழலா னறுமணம் வாய்ந்த
விரிமலர் மாலைக ளாலே
வரசரோ ருகமா மலர்த்திரு முகத்தாய்
மற்றொரு மன்றலுற் றிடுமால்.

பதவுரை:—வரசரோருகமா மலர்த்திருமுகத்தாய் - சிறந்த செந்தாமரையின் பெருமைபெற்ற புட்பத்தைப்போலப் பொலிவுற்ற திருமுகமண்டலத்தையுடைய நாய்ச்சியாரே! சரதமாமறைகள் - மெய்ம்மையாகிய மேன்மைபொருந்திய வேதங்கள்; உயர்ந்ததம் முடியால் - சிலாக்கியமாகிய தமது மௌலியென்னும் உபநிடதத்தாலே; பரவும் அன்பொடு - மிக்க ஆதரத்துடனே; எவனை - யாரை; சருவகந்தன் என - சகல பரிமளசொரூபனென்று; பகர்ந்திடும் - கொண்டாடுகின்றதோ; அந்த - அப்படிப்பட்ட; பசுந்துழாய்முகுந்தனும் - (அங்குரிக்கும்பொழுதே வாசனையோடு கூடியிருக்கிற) பசுமையான திருத்துழாய்மாலையையணிந்த புக்தி முத்திப்பிரதனை அழகியமணவாளனும்; மன்றல்விரவு - இயற்கைவாசனையையுடைய; நின்றன் குழலால் - தேவரீரது திருக்குழற்கற்றையினாலே; நறுமணம்வாய்ந்த - திவ்ய பரிமளமமைந்த. விரிமலர்மாலைகளாலே - விகசிதமான புட்பத்தொடையலாலே; மற்றொருமன்றல் - பிறிதொரு திவ்வியபரிமளத்தை; உற்றிடும் - சேரும். எ-று. ஆல் - அசை.

கருத்து:—திருவரங்கமன்னனுருக்கு உபநிடதங்களாலே சருவகந்தனென்று கொண்டாடப்படும் பெருமையைக்காட்டிலும், நாய்ச்சியார் சூடிக்கொடுத்த திருமாலையைச் சூடிக்கொண்டதனாலே உண்டான வேறொரு அத்விதீயமான பரிமளமுடைமையாலுண்டான பெருமை மேலானதென்பதாம்.



விசேடக்குறிப்பு:— சரதமாமறையென்றது, உண்மைப்பொருளையேயுணர்த்துவனவாய், முக்குணவசத்தால் முறைபிறழ்ந்தலைகின்ற சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினையுடைய புருடர்களாலே புனைந்துரைக்கப்படாதனவாய் முழுமுதற்கடவுள்போலே நித்தியமாய் முக்கியப்பிரமாணமாய்ப் பெருமைவாய்ந்து விளங்குதலாலே. மறைமுடி - வேதாந்தம். இதனையே யுபநிடதமென்ப. சருவகந்தன் என்றது சகலவிதமான பரிமளச்சொரூபனாகவிருத்தலில். "சர்வகந்த: சர்வரச:" என்பது உபநிடதம். துழாய் மாலைக்குக் கருவியாகுபெயர். வரம் - மேன்மை; சரோருகம் - குளங்களின் முளைப்பது. மலர்களுக்கெல்லாஞ்சிறந்ததாதலின் மாமலரெனப்பட்டது. மா - என்பது திருமகளுக் கொரு திருநாமமாதலின் திருமகள்வாசஞ்செய்யும் மலரென்றுமாம். "பூவிற்குத் தாமரையே" "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பது காண்க. ஒருமன்றலென்றது - அத்விதீயமான திவ்யபரிமளத்தை.

இப்பாட்டு, மூன்றினமும் ஆதிமுத லந்தம்வரை சமமாகக்கலந்து வந்திருத்தலாலே சமநிலையாம். "விரவத் தொடுப்பது சமனிலை யாகும்" என்னும் விதிக்கு வல்லெழுத்துக்களாலாகிய தொடை, மெல்லெழுத்துக்களாலாகியதொடை, இவ்விருவகை எழுத்துக்களாலாகிய தொடையென்றும் பொருள்கூறுவர்.

அணி:—முகுந்தன் இயற்கையாலும் செயற்கையாலு மமைந்த பரிமளத்தைவிட்டுச் சூடிக்கொடுத்தமாலையினாலே மற்றொரு அத்விதீயமான திவ்ய கந்தத்தைப் பெற்றானென்கையால் பிறிதின்குணம்பெறலணியாம். இதனிலக்கணம் 22-வது பாட்டுரையிற் காண்க. (கக)

20. கோதையே நினது கோதையிற் சூடிக்
கொடுத்தருள் கோதையை விரும்பி
மேதக நன்கு புனைதர லாலே
மிக்கநற் பேறுபெற் றிலகும்
ஆதியின் முடியில் வெகுமதிப் பொடுநின்
னன்பவிர் நோக்குவைத் திடுதல்
சீதநீர்க் குவளைத் தெரியலை மேலுஞ்
சிறப்புறச் சூட்டுதல் சிவணும்.

பதவுரை:—கோதையே - நாய்ச்சியாரே!; நினது கோதையில் - தேவரீர் திருக்குழற்கற்றையில்; சூடிக்கொடுத்தருள் - புனைந்து தந்தருளிய; கோதையை - திருமாலையை; விரும்பி - இச்சித்து; மேதக - மேன்மையாக;

நன்குபுனைதலாலே - நன்றாகத் திருமுடியிலணிந்துகொண்டிருத்தலாலே; மிக்க நற்பேறு பெற்றிலகும் - மிகுந்த சௌபாக்கியத்தையடைந்து விளங்குகின்ற; ஆதியின்முடியில் - ஜகத்காரணவஸ்துவான அழகியமணவாளனது திருவபிஷேகத்தின்மேல்; வெகு மதிப்பொடு - மிகுந்த கௌரவபுத்தியோடு; நின் அன்பு அவிர் நோக்கு வைத்திடுதல் - தேவரீர் காதல்விளங்கும் கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டிருத்தல்; சீதநீர்க் குவளைமலர்கொடு தொடுத்த - குளிர்ந்த நீர்நிலைகளிலே தோன்றிய நீலோற்பலமலர்களைக்கொண்டு தொடுத்த; தெரியலை - மலர்மாலையை; மேலும் - மறுபடியும்; சிறப்புற - மேன்மை மிகும்படி; சூட்டிடல் - (அந்தத் திருவபிஷேகத்தின்மீது) அணிந்ததை; சிவணும் - ஒக்கும் எ-று.

**கருத்து:**—நாய்ச்சியார் தாம் சூடிக்கொடுத்த திருமாலையைத் திருமுடியின்மேல் அழகாக வனைந்திருத்தலாலே பெறுப்பேறு பெற்றதாகிய அழகிய மணவாளனது திருமுடியை அடிக்கடி அன்போடு கடைக்கண்ணாற் பார்த்துக் கொண்டிருத்தல், அத்திருவபிஷேகத்தின்மேலே மற்றொரு இந்தீவரமலர் மாலையைப் புனைந்திடுதல்போலும் என்பதாம்.

**விசேடக்குறிப்பு:**—கோதை மூன்றுக்கும் முறையே நாய்ச்சியார், திருக்குழற்கற்றை, மாலை—யென்று பொருள்கொள்க. மிக்க நற்பேறு பெற்றிடுதல்- தந்யமாக ஆதல். இங்கு அன்பு அவிர் நோக்கு என்பது, ஆகேகரமென்னும் கடைக்கண்பார்வையை; அதாவது: பாதி மூடியும் பாதி மூடாமலுமிருக்கிற கடைக்கண்களையும், அடிக்கடி பிறழ்கின்ற கருமணியையுமுடைய கண்களாலே காதன்மைதோன்ற நோக்குதல்.

இப்பாட்டு, கருதியபொருளைத் தெரிவுறுதற்குரிய சொற்கள் விரிந்து விளங்குதலில் உய்த்தலில்பொருளுண்மையென்னுங் குணமுடையதாம்.

**அணி:**—இப்பாட்டு முதலடியில் வழியெதுகை வந்திருத்தலின் அநுப்பிராசம் என்னும் சொல்லணியதாம். எம்பெருமானது திருமுடியில் வைத்திருக்கிற நாய்ச்சியாரது கடைக்கண்பார்வையினுடைய நீலநிறமுடைமையென்னுந் தருமசம்பந்தத்தாலே குவளைமலர்மாலையென்னும் பொருளினபேதம் சம்பாவிக்கப்படுதலாலே விரீபுலப்பொருட்டற்குறிப்பேற்றவணியாம்.

(௨௦)

21. திருவரங் கேசன் றனக்குநின் றனக்குஞ்
சேர்தருங் கேண்மையி னாலே
ஒருவருக் கொருவர் மாலைமாற் றுதலை
யுவப்பொடு புனைந்துரை விபுதர்
மருவரு மளக வசுதையே குறைவு
மற்றுயர் வொப்பெனும் வழக்காற்
பொருவரு மார வாரமுள் ளனவாப்
புரிவராற் புவனமூன் றையுமே.



**பதவுரை:**—மரு வரும் அளக வசுதையே - இயற்கையாகிய திவ்யபரிமளந் தோன்றுகின்ற திருக்குழற்கற்றையோடு கூடிய பூருபியாயிருக்கிற நாய்ச்சியாரே!; (பூதேவியாரின் பூர்ணாம்சமாகத் திருவவதரித்தருளிய கோதையாரே! என்றுமாம்.) நின்தனக்கும் - தேவரீருக்கும்; திருவரங்கேசன் தனக்கும் - அழகியமணவாளனுக்கும்; சேர்தரு கேண்மையினாலே - உண்டாகிய பிரணயத்தினாலே; ஒருவருக்கொருவர் மாலைமாற்றுதலை - அந்நியோந்ய மாலாபரிவிருத்தியென்னும் ஒரு மங்கலச்சடங்கை; உவப்பொடு - உள்ளத்து மிகுந்த சந்தோஷத்துடனே; புனைந்துரை - புகழ்ந்துபேசுகின்ற; விபுதர் - பரமரசிகர்களான வித்வான்கள்; குறைவு, உயர்வு, ஒப்பென்னும் வழக்கால்—இவற்றால் இவர்க்குத் தாழ்வு, இவற்றால் இவர்க்கு மேன்மை, இவற்றால் இருவர்க்கும் ஒப்பு—என்னும் விவாதமொழிகளாலே; புவனம் மூன்றையும் - திரிலோகங்களையும்; பொருவு அரும் - ஒப்பில்லாத; ஆரவார முள்ளனவா - முழக்கத்தையுடையனவாக; புரிவர் - செய்வார்கள். எ-று. மற்று, ஆல் அசைகள்.

**கருத்து:**—வருடந்தோறும் நாய்ச்சியாருக்கும் மன்னனுக்கும் நடக்கிற மாலைமாற்றலாகிய உத்ஸவத்தைச் சேவித்துப் பரமாநந்தபரிதர்களாயிருக்கிற ரசிகசிரோமணிகளாகிய விபுதர்கள், சிற்சில காரணங்களைக் கொண்டு நாய்ச்சியாரே எந்நலத்தாலுமுயர்ந்தவரென்றும், மன்னனே மகிமையாலுயர்ந்தவரென்றும், இருவரும் இரண்டினாலும் ஒப்பானவரென்றும் சொல்லுகிற பூர்வபக்ஷ சித்தாந்தரூபமான வியவகாரமொழிகளாலே மூன்றுலகங்களையும் சப்தாயமானமாகச் செய்கின்றார்களென்பது.

**விசேடக்குறிப்பு:**—மாலைமாற்று ஸ்ரீவில்லிபுத்தூரில் வருடந்தோறும் பங்குனியுத்தரத் திருக்கலியாண மகோத்ஸவத்திலும், ஸ்ரீரங்கம் உத்ஸவத்திலும் இன்றும் நடந்துவருகிறது. அரங்கேசன்—குணசந்தி. அளகவனிதை இரண்டாம்வேற்றுமையுருபும்பயனு முடன்றொக்கதொடர். வசுதை - பூமி; இது அதன் அதிதேவதையாகிய பூமிப்பிராட்டியாரை; பிராட்டியாரின் பூர்ணாம்சசம்பூதையாரான நாய்ச்சியாரை யிங்குக் குறிக்கிறது. உயர்வு ஒப்பு- "முற்று மற்றொரோவழி" என்றதனால் உயர்வொப்பு என்றாயிற்று. ரசிகர்

வியவகரிக்கும்பொழு தெழுகின்ற முழக்கம் கடல்முழக்கினும் மிக்கிருத்தலால், பொருவருமாரவார மெனப்பட்டது. புவனம் மூன்றென்றது, சுவர்க்க மத்திய பாதாளங்களை.

இப்பாட்டு, பலபொருள்பயக்குந் திரிசொற்களேயில்லாமல் கருதிய பொருள் வெளிப்படையாய்த் தெரிதலாலே தெளிவு என்னும் குணவணியதாம். (உக)

22. அறுகெனும் பசிய புல்லினை யனைய
வணிநின தனுவொளி யாலும்
உறுநறுங் கோரோ சனைதனை யனைய
வொண்டிரு வுருநிழ லாலும்
நறுவிய மயிலின் கயிலியன் மருவி
நாயக னெழிற்றிரு மேனி
மறுவறப் பணிவார் தமக்குமங் களமாம்
வாழ்க்கையை யருள்வதா யினவால்.

பதவுரை:—அனை - அகிலலோகஜநநியான வசுதாதேவியாரே!; நாயகன் - சர்வலோக நாயகனாகிய அழகியமணவாளனது; எழில் - அழகிய; திருமேனி - திருமேனியானது; அறுகு எனும் பசும்புல்லினை யனைய - தூர்வா என்று சொல்லப்படும் பசுமையானபுல்லைப்போன்ற; நின தனு ஒளியாலும் - தேவரீருடைய திருமேனியின் காந்தியினாலும்; உறு நறுங் கோரோசனை அனைய -. பொருந்திய கோரோசனையைப்போன்ற; ஒண் திருவுரு நிழலாலும் - ஒள்ளிய திருமேனியின் சோபையினாலும்; நறுவிய மயிலின் - நல்ல மயூரத்தினது; கயில் இயல் - கழுத்தினதுசாயலை; மருவி - சார்ந்து; மறு அற - தீங்குகள் நீங்க; பணிவார்தமக்கு - வணங்குகின்றவர்களுக்கு; மங்களமாம் - சுபகரமாகிய; வாழ்க்கைய் - பெருவாழ்வை; அருள்வதாயினது - கொடுத்தருள்வதாயிற்று எ-று. ஆல்-அசை.

கருத்து:—நாய்ச்சியாரது பொறுமையென்னுங் குணத்திற் கறுகுணமாயிருக்கிற புருவத்தின் அழகிய வொளியினாலும், பெரியபிராட்டியாரின் கருணைக் கறுகுணமாயிருக்கிற இன்சொற்களாலும், துஷ்டநிக்கிரகபூர்வகமாகச் சிஷ்டபரிபாலனஞ் செய்தருளும் சர்வேச்சுரனது திருவுள்ளமானது தனக்கியல்பாயமைந்த சுவாதந்திரியத்தைவிட்டுத் தாக்ஷண்ணியத்தையும் காருண்யத்தையும் அமைந்து அடியார்களை அந்தமில்பேரின்பத்தை யடைந்துவாழும்படி செய்வதாகவாயிற் றென்பது.



1569 மண்டழற் சிறுகட் கூர்த்த வளர்பிறைக் கோட்டு மோட்டுத்
திண்டிறற் கரிக டாமுஞ் சீற்றமே பெருக்கிப் பின்னுந்
தண்டொடு முசலம் வேடர் சமர்முகத் தெறிய வேற்றுக்
கொண்டவன்சூலங்கைமேற்கொண்டெதிர் சூளிறுமன்றே.

1570 மாண்புடை நிருதர் காலன் மறங்கிள ரிடக்கை வல்லின்
னாண்புடைத் திடலும் பாங்கர் நயந்துளார் கனகன் மேனாட்
டூண்புடைத் திட்ட வோதை துணையென்னத் துடையிற் கொற்றங்
காண்புடைபரந்த தட்டுங்கடகமும்புடைத்திட்டார்த்தார்.()

1571 புணர்ப்பிறை மருப்பு நால்வாய் பொழிமதக் கரட வேழத்
துணைப்படைகளின்பின்னின்ற துணைப்படைக்களிறியாவுங்
கணைத்தொடை மறவர் வாமக் கைப்படைப் புடைப்பின் யாக்கை
பிணைப்பட விறந்த வோதை செவியுறப் பீழை கூர்ந்தே. ()

1572 சிதைவிலா மதமா மூன்றுஞ் சிலைக்குவட் டொரு[1]கை செம்பொற்
கதைமுத லாய வேதி களைப்புடைப் போதை யண்டம்
புதைபுனற் பெருக்கை யீன்ற புயலுண்மின் னிடியெ னாமன்
பதைபதைத் திறந்த மூவர் படைக்கலஞ் சுமந்து நின்றே.

1573 கடங்கவிழ் கரட வேழங் களப்பட வுகுபுண் ணீரைக்
குடங்கையால் வேட ருண்ண வெரீஇக்கொடுங் கூளி யோட
வுடங்கிறந் தவர்மெய்ச் சோரி கரிகளு முணப்பாங் குற்ற
மடங்கலு மிரிந்த பேழ்வாய் மடுக்குமென் றினைந்த மாதோ.

வேறு.

1574 இருநிதி விளைப்பான் வினைவிழைந் தவர்க
ளிதற்கிது முறையென வியற்றுங்
கருமம்யா வையுநோ யிழைக்கவு முயற்சி
கைவிடா நிலைமையே பொருவுஞ்
செருவினை விளைக்குந் தொறுமுறப் பிணுக்குத்
தீங்கெறி படைவிளைத் திடவும்
பொருமதப் பொருப்பா தியவும்வே டுவரும்
போரைமேற் கொளுமனக் களிப்பே. (௩௩)

[பி-ம்.] 1 கைச் செம்பொற். சா.

1575 மதுகுலத் துதித்து மதுவைமாந் தினராய்
மதிமறைந் தவர்கடா மெவ்வ
மனுபவிப் பதனை யயின்றிலார் கண்டு
மருந்தியே களிப்பதோ டொன்று
மெனுநிலைத் திமையோர் காலனே டிகல்செய்
சண்டவா யுவுமிறந் ததுநீஇத்
தனுவெடுத் தவனு தியர்கதை யெடுத்த
தந்தியா தியதருக் குறலே. (ருசு)

1576 அருள்பிறக் கிடவே யிகல்செய்யா விலங்கை
யயிலின்வாய்ப் படுத்தியூன் சுவைத்தார்
தெருள்புரி பனுவல் கொலையினுற் படுக்குந்
தீங்கெடுத் துரைப்பதுற் றினைந்து
மருள்புரி மனத்தான் மறித்துமப் புலவுண்
மடமையர் களிப்பையே பொருவும்
பொருள்புரி வதிலா வேடுவர் திரளும்
புகர்முகத் தவுங்களித் திடலே. (ருஎ)

வேறு.

1577 பார விற்றெழில் பயின்றுளார் பாரமே யன்றித்
தூர மெய்துள வெல்லையே நீளமாய்த் துணைக்கொள்
வீர வாளிக ளூரொரு தொடையென விடுத்தான்
கோர முள்ளுடைச் சல்லிய நிகர்த்தகுஞ் சரமே. (ருஅ)

1578 காய்ந்த வெவ்வழற் கடைக்கண்வே ழமுங்கடுங் கணைகள்
வாய்ந்த தன்படை யாமெனப் பறித்தெதிர் வழங்கச்
சேந்த னேவிய பருதிவேல் கணத்தொடுஞ் செறிந்தே
பாய்ந்த வெற்பெனத் தோன்றுமால் வேடுவன் படிவம். ()

வேறு.

1579 சரங்கள் மார்புறத் தைத்தமை மனக்கொளான் றனுவாங்கி
வரங்கொள் வேறுபல் வாளிக ளேவினன் மதமாவு
முரங்கொள்வாளியைமதித்திடாக்கதையினையுடன்றோங்கிக்
கரங்கொ டெற்றலு முரிந்தன [1]சிலையொடு கதைதானும். (சு0)

[பி-ம்.] [1] சிலையொடுங் கதைதானும். ச.



வேறு.

1580 வீரவா ளிகளைப் பறித்தய லெறிந்தான்
வேழமும் பறித்தய லெறிந்த
தாரவா ரமுட னேவல்செய் குநரை
யடுபடை தருகெனு மளவிற்
பாரவா ளினையே கொடுத்திட வலக்கை
பற்றினன் பகடுமந் நிலையே
யீரவா ளிதெனப் பிறிதொரு கதையை
யெடுத்திடி யேறென விடிக்கும். (சுக)

வேறு.

1581 நாண மின்றியூ றுறுதொறு முறுதொறும்
பிறர்மனை நயந்தார்கள்
வேண வாவுமே பொருவரும் பொருவரும்
வேடனும் விறன்மாவும்
பாண நின்றெழு புழைதொறும் பசும்புணீர்
பாய்வதும் பாராதே
கோண யந்ததோ ரடல்பெற மனக்களி
[1]கொழுந்துவிட் டெழுன்மன்னே. (சுஉ)

1582 ஆக்க முற்றவ னுக்கமுற் றவன்றனை
யயலெதி ரெதிர்காய்ந்தே
நீக்க முற்றிடா மனத்தழுக் கிழைப்பதே
நிரப்பிழைத் திருபாலுந்
தேக்கு பல்பொரு டொலைந்துமப் பொறுமைகூர்
திறம்பொரு வரும்வாளி
தாக்கும் வேடுவ னெடுகடா மலையும்வெஞ்
சமர்பொரத் துணிசால்பே. (சுங)

வேறு.

83 ஆயிர முகமாய் முனைத்தொழில் விகற்ப
மடையினி லெடுத்தடி பெயர்த்தான்
றீயெழ விழித்துப் பொருமதப் பொருப்புந்
திண்ணிதாங் கதையினைக் கறங்குக்

[பி-ம்.] [1] கூடவிட் டெழுன்மன்னே. ச.

கேயின சாரி [1] யிதனிடத் தாய
தெனச்சுழற் றலும்புகர் முகத்திற்
காய்சினத் தொடும்வெட் டினனதைத் தடுத்துக்
கதைகொடந் தரத்துயர்த் தியதே. (சுச)

1584 அந்தரத் துயர்த்த கதையினைப் பணித்தவ்
வடல்வடி வாளினன் [2] மதஞ்சோர்
மந்தரப் பொருப்பின் வாமபா கத்து
மருப்பினை நுதியினிற் குறைத்தான்
சிந்துரம் பணைக்கைக் கதையினை மாறித்
திணியிடப் புயத்தினை யொடிப்பச்
சந்துவைப் பிறொடு வீசின னுதிரஞ்
சாடின திடதுகாத் திரமே. (சுரு)

1585 சொரிந்தசோ ரியொடுஞ் சொரிந்தன விடது
துடையினிற் கதையினைச் சாட
விரிந்திழி நிணத்தொ டாறெனக் குருதி
வேடனும் வீரவா ளதனல்
அரிந்தனன் வலப்பாற் கன்னதா ளத்தை
யாயிடைக் கரிவல மருப்பாற்
சரிந்ததாங் கவன்றன் வலச்செவி யுதிரச்
சலதியா யதுசமர்க் களமே. (சுசு)

1586 படைக்கல மிருப்பப் பரிதிமண் டலத்திற்
பரந்ததோற் பலகையை வாங்கித்
துடைத்தன னேர்மை கிழுமே னுமுறத்
தும்பியுந் துணைமருப் பினுக்கே
யடைத்ததத் தொழிலை யடைத்தபின் வலக்கை
யடல்வடி வாளினை யசைத்துப்
புடைத்தனன் புடைப்பப் பொருமதப் பொருப்பும்
புடைபெயர்த் ததுகதை யினையே. (சுஎ)

[பி-ம்.] [1] யதனிடத். சா. [2] மதஞ்சார். க



87 முட்டினன் கிடுகி னெடும்புகர் முகத்தே
முட்டிய பின்னர்நாந் தகத்தால்
வெட்டினன் புறக்கிட் டவற்றையோர் மருப்பின்
மேற்கொள்வான் கதையுமாய்த் தடுத்த
தொட்டியே பறித்திட் டெதிர்ந்தவ னுரத்து
ளோர்மருப் பழுத்தலும் பறித்த
தட்டினற் கதையைத் தாங்கினன் குறைத்த
தடக்கைவா ளிடத்தனி மருப்பே. (சுஅ)

88 வாமபா கத்து மருப்பினை யிழந்த
மதமலை மறவன்மார் பழுத்துஞ்
சேமவொண் மருப்பைப் பறித்தவ னிடக்கை
செறித்தகே டகத்தினைக் கிளைத்தே
நாமவான் பணைக்கைக் கதையினை நிமிர்த்து
நடந்தெதிர்ந் தடித்திடத் துணிந்த
வேமவான் பருதி பொருவுமக் கிடுகோ
டெழுவெனத் திரளிடக் கையுமே. (சுகூ)

89 செக்கர்வா [1]னகத்துப் பரிதிமண் டலத்தைத்
தீண்டிய நீளிரா குவென
வுக்கசெங் குருதிக் கடலிடை யரக்குண்
டொளிரும்வே திகையுட னுலாய
வக்கரத் தினைக்கண் டகத்தைவைத் தெடுத்தே
யாடன்மா முகத்தவ னெறியக்
கைக்கதை யினைவைத் தற்றுவீழ் மருப்பைக்
கடுத்தெறிந் தவைதடுத் திடிக்கும். (எ0)

90 எடுத்தெறி மருப்போ டடர்ப்படு மிடக்கை
யேந்துகூர்ப் பரத்தொடு கினுத்தந்
தொடுத்துள குலிகக் கிடுகுளாய் மறித்துஞ்
சோரியு னுறைவது கரும்பாம்
புடுக்களுக் கிறைவ னும்பிறை யமையோ
டுறுபரி தியைப்புடை பிதுங்க
நடுப்பட விழுங்கி நிலத்துளாய்ப் பவழ
நாலையு னுறைவது பொருவும். (எக)

[பி-ம்.] [1] னத்து. சா.

1591 மானிடர் கூற்றம் வாமபா கத்து
வன்றடக் கையும்வலச் செவியு
மூனமுற் றதனு ளுட்கின னிற்ப
வுறைகழித் தொளிறுசூ லத்தை
யீனமுற் றதுவா மொருமருப் புடைவெற்
பிறந்ததொன் றெனமுகத் தெறியப்
பீனமத் தகத்தைத் [1]துளைத்திட வுதிரம்
பிறந்துருட் டினபிண மலையே. (எ௨)

1592 முதிர்திரைச் சோரிப் பெருக்கினை வடவா
முகங்குறிக் கோடலு மிடிபோன்
றதிர்குரல் பெருக்கி நிருதர்கூற் றுவன்றன்
னுடல்வன் சிரத்தினி லுதிரங்
குதிகொள முசலங் கொடுபுடைத் திடலுங்
குலிகமால் வரையரு வியென
வுதிரமொ டுதிர மளவளா யுருட்ட
வூசலா டுவபிண மலையே. (எ௩)

1593 வன்படை யவுணர் கூற்றமென் பவனு
மானவ ரெடுத்தவே திகளா
மொன்பதிற் றிரண்டிற் சிறந்தவே லதனை
யொருமருப் புடைக்கரு வரையா
மென்பதன் பணைக்கை மேல்விட விடியே
றியக்குசூ லமுமதைத் தடுத்து
முன்பொரு நிருதர் கூற்றுவன் றடக்கை
முடுகலுந் தடுத்ததவ் வேலே. (எ௪)

1594 இடதுபா கத்தும் வலதுபா கத்து
மிணைப்படைத் தொழிலடங் குதலும்
படர்சினத் தறுகண் ணிருதர்கூற் றுவனும்
பாரும்வா னமுமடுக் குறலிற்

[1] துளைத்திடா. ச.



சுடர்வடி வாளை விதிர்த்தன னதன்பின்
சுழற்றினன் றிசைக்குவ டிடியக்
கடல்சுலா முலகிற் காரிடி தடித்திற்
கலந்ததொன் றிஃதெனும் படிக்கே. (எ௫)

1595 மத்தவெங் களிறு மத்தகத் தழுத்தும்
வைந்நுதிக் கொழுநிணக் குருதி
முத்தலை முருட்டுச் சூலவன் படையை
முடக்குவன் பணைக்கையாற் பறித்தே
பத்திபெற் றுளவெண் டிசையினுஞ் சுழற்றப்
பரிதிமால் வரைக்குவ டதிர்ந்த
கைத்தலம் விசும்பி னிமிர்ப்பவே யுதிர்ந்த
கடுவெளி முகட்டுடுக் கணமே. (எ௬)

1596 ஏனைவே டுவருங் கடகரித் திரளு
மிடியெனக் குளிறுபு தடக்கைத்
தானையா னவற்றை விதிர்த்தெதிர் நடந்து
தாக்குக தாக்குக வெனலு
மூனையுண் டுதிரத் தினைக்குடித் துயிர்மே
லுடக்குவன் படைகளோச் சுதலுஞ்
சேனைசெங் [1]களத்துக் கலந்திடு மளவிற்
சிதறினர் தேவர்தா னவரே. (எ௭)

1597 பூட்சிசான் மறவர் கடகரித் திரள்கள்
பூசல்வேட் டிடித்தெதி ரெறியும்
வாட்படை யொளியால் வேற்படை யொளியால்
வடித்தமுத் தலைப்படை யொளியாற்
காட்சிசார் திறங்கா ரிடிதடித் தினொடுங்
கலந்ததும் பொருவுநீர் கனல்கால்
மாட்சிசா லுபய வடிவெடுத் தனவாய்
மறத்தொடும் பொருவதும் பொருவும். (எ௮)

 [1] களத்திற். சா.

1598 நாந்தகப் படையா லெறிவதை யிருளை
நக்கிவெண் ணிலவுமிழ் சூலத்
தேந்திய வுடக்கோ டெறும்வலிப் புயத்தி
லிடிவிழுந் தனையதொன் றென்னப்
பாய்ந்துகுத் துவதை முசலம்வேல் குலிசப்
படைபயிற் றியவடை வுகளை
யாய்ந்தறி வரிய தவற்றினோ டவர்க்கு
மடைவறி பவர்பிற ரெவரே. (எகூ)

1599 எறிந்தவான் படைகள் யாவையு மெதிர்சென்
றிடியெனக் குளிறியே யெற்றித்
தறிந்துநோன் பொறிக ளுடுக்கண முதிருந்
தகைத்தெனக் களத்துதிர்ந் ததற்பின்
முறிந்திடும் படையிங் கென்னினி யெனவே
முழுமதி தவழுமு தண்டஞ்
செறிந்தவே தண்டங் களைக்கிளைத் தெறிந்தார்
சிந்துரங் களுங்கிளைத் தெறிந்த. (அ௦)

1600 இருகையால் வேட ரெறிந்தகுன் றுகளை
யேற்றபின் குஞ்சரத் திரள்கள்
ஒருகையா லெறிய வேற்றகுன் றினொடு
மொருகைபோ [1]முறையினன் மூன்றாய்ப்
பொருகைதா மொருகை யாயதே யன்றிப்
பொருகையு மொருகையாய் வென்றி
தருகையா யினகுஞ் சரமொடொன் றினர்வன்
சவரரு மென்பர்வா னவரே. (அக)

601 சோரியா றுடைத்துப் பருப்பதம் பலவுந்
தொட்டகுண் டகழுளாய்ச் சோரி
வாரியா மெனவே யுவட்டெடுத் தொலிப்ப
மண்டமர்க் களமெதி ரெதிர் போய்

[பி—ம்.] 1 முறையினின். சா.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

# 1935-ஆம் வருஷ டிசம்பர்மாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1935 டிசம்பர் | வரவு 1934 டிசம்பர் | விவரம் | செலவு 1935 டிசம்பர் | செலவு 1934 டிசம்பர் |
|---|---|---|---|---|---|
| I. GENERAL SECTION : | | | I GENERAL SECTION : | | |
| | | | (1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 73 8 ... | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு... | 70 ... ... | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 85 ... ... | |
| | | | (3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது, ... | 134 ... ... | |
| (2) சங்கக் காலிபிடத்துக்கு மாத வாடகை வரவு ... | 30 ... ... | | (4) Stationery, contingencies வகையிற் செலவு ... | 2 ... 6 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) Miscellaneous வரவு ... | 1 | 7 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 101 | 7 | ... | 103 | 10 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (5) தபால், தந்தி வகையிற்செலவு | 6 | ... | ... | | | |
| (6) சங்கமாபீசு சில்லறை வேலைகள் சம்பந்தமாக பைண்டிங்கூலி செல்லாக்கியது. | 6 | ... | ... | | | |
| மொத்தம் ரூ | 306 | 8 | 6 | 596 | 1 | ... |

II Editorial Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு. | 12 | 10 | ... | | | |
| (2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைச் சந்தாவகையில் வரவு ... | 24 | 15 | ... | | | |
| (3) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 15 | 5 | ... | | | |
| (4) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு ... | 4 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 56 | 14 | ... | 127 | 15 | 6 |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) டை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 80 | 7 | 9 | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு | 71 | ... | ... | | | |
| (3) தபால் தந்திவகையிற் செலவு | 9 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 160 | 7 | 9 | 100 | 5 | ... |

III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு ... | [illegible] | | | | | |
| (2) பைண்டிங்கூலிவகையில் வரவு ... | 3 | ... | ... | | | |
| | | | | [illegible] | 50 | [illegible] |

III Press Section :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 40 | 11 | 9 | | | |
| (2) டை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு. | 4 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 44 | 11 | 9 | 88 | 5 | [illegible] |

| | 1936 | | | 1935 | | | | 1936 | | | 1935 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 235 | 5 | ... | 290 | 9 | 6 | ஆக மொத்தம் செலவு ரூ. | 511 | 12 | ... | 734 | 11 | |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ... | 440 | ... | 9 | 4612 | ... | 5 | மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ... | * 163 | 9 | 9 | 4167 | 14 | |
| ஆகமொத்தம் ரூ. ... | 675 | 5 | 9 | 4902 | 9 | 11 | ஆக மொத்தம் ரூ. ... | 675 | 5 | 9 | 4902 | 9 | 11 |

*By M. R. C. C. Bank
Pass Bk. Rs. 50– 0– 0

Cash on hand Rs. 113– 9– 9

163– 9– 9

குறிப்பு:—மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 163—9—9 தவிர, மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்கான Fixed Deposit-ல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 25011—5—0. (2) ரூ. 1050—0—0; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்கான Fixed Deposit-ல் வைக்கப்பட்டுள்ள தொகைகள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000. (3) ரூ. 5000. [illegible] வைக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, Auditor, 6—1—'36.

LAKSHMINARAYANAN,
Manager, 6—1—'36.

## மதுரைத்தமிழ்ச்சங்கதது

## 1936-ஆம் வருஷ ஜனவரிமாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1936 ஜனவரி | | | வரவு 1935 ஜனவரி | | | விவரம் | செலவு 1936 ஜனவரி | | | செலவு 1935 ஜனவரி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | | I. General Section: | | | | | | |
| (1) மாதச்சந்தாவகையில் வரவு ... | 80 | ... | ... | | | | (1) சங்கம் மகேனஜ்மெண்டார் பிரிவில் [illegible] சம்பளம் செல்லாக்கியது ... | 178 | 8 | ... | | | |
| (2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ... | 812 | 10 | 4 | | | | (2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 195 | ... | ... | | | |
| (3) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக் கட்டணத்தொகை வரவு | 228 | 10 | ... | | | | (3) Stationery contingencies வகையிற்செலவு ... | 8 | 11 | 9 | | | |
| (4) மதுரை M. R. C. C. Bank-ல் Fixed deposit-ல் வட்டிக்குப் போடப்பட்டிருந்த தொகை வாயிதாகாலம் முடிவானதால் திரும்பவாங்கியது. ... | 25011 | 5 | ... | | | | (4) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைகளுக்குச் சந்தா செல்லாக்கியது. ... | 6 | 9 | ... | | | |
| | | | | | | | (5) தபால், தந்திவகையிற்செலவு | 18 | ... | ... | | | |
| (5) சங்கக்காவிபிடத்துக்கு மாத [illegible] வரவு ... | 30 | ... | ... | | | | (6) சங்கமாபீக [illegible] கள் [illegible] வகையிற் செலவு ... | 5 | 8 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (6) **Miscellaneous** வரவு ... | 2 | 7 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 26165 | ... | 4 | 945 | 14 | 10 |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ... | 4 | ... | ... | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 50 | ... | 3 | | | |
| மொத்தம் ரூ ... | 54 | ... | 3 | 146 | 8 | ... |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சுக்கூலிவகையில் வரவு. | 75 | 8 | ... | | | |
| (2) பைண்டிங் கூலிவகையில் வரவு ... | 3 | ... | ... | | | |
| | 78 | 8 | | 54 | ... | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (7) மதுரை M. R. C. C. Bankல் Fixed Depositல் வட்டிக்குப் போட்டிருந்தொகை வாயிதா முடிவானதால் திரும்பவாங்கி யதை மறுபடியும் டிை பாங்கி லேயேவட்டிக்குப்போட்டிருப் பது ... | 25011 | 5 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 25418 | 9 | 9 | 406 | 14 | 2 |

II Editorial Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) டிை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ... | 74 | 18 | 5 | | | |
| (2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ... | 35 | 1 | 1 | | | |
| (3) டிை சம்பந்தமாக அச்சுக் கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ... | 73 | ... | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செலவு. ... | 8 | ... | ... | | | |
| மொத்தம் ரூ ... | 190 | 14 | 6 | 116 | 2 | 5 |

III Press Section:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது | 85 | 18 | 1 | | | |
| (2) டிை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு. | 7 | 14 | 6 | | | |
| மொத்தம் ரூ. ... | 43 | 11 | 7 | 87 | 7 | 8 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 26297 | 8 | 7 | 1146 | 6 | 10 | ஆக மொத்தம் செலவு ரூ ... | 25653 | 3 | 10 | 610 | [illegible] | |
| மாத ஆரம்பத்திலிருந்த கைஇருப்பு ரூ ... | 163 | 9 | 9 | 4167 | 14 | 4 | மாத முடிவில் மீதி இருப்பு ரூ ... * | 807 | 14 | 6 | 4703 | 13 | |
| ஆகமொத்தம் ரூ ... | 26461 | 2 | 4 | 5314 | 5 | 2 | ஆகமொத்தம் ரூ ... | 26461 | 2 | 4 | 5314 | 5 | |

*By M. R. C. C. Bank
Pass Book Rs. 50- 0- 0
Cash on hand Rs. 757-14- 6

807-14- 6

[illegible] மீதி இருப்பு ரூ. 807-14-6 [illegible] M. R. C. C. Bank [illegible] Fixed Depos[illegible] (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; [illegible] (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; [illegible] ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 20—2—'36.

LAKS[illegible]AYANAN,
[illegible], 8—2—'36.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள். 61

### II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திணைமாலையம்பது உரையுடன் ... ... | ... | 0 | 4 | 0 |
| | நூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) | ... | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் ... ... | ... | | | |
| 4. | புலவராற்றுப்படை ... ... | ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... | ... | 0 | 12 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... | ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) | .. | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... | ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... | ... | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் ... | ... | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் ... ... | ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... | ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... | ... | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... | ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... | ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... | ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... | ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... | ... | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் ... ... ... | ... | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... | ... | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) ... | ... | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா ... ... | ... | | | |
| 24. | குருமொழிவிளைவிடை ... ... | ... | 0 | 1 | 0 |
| 25. | சேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... | ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... | ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... | ... | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் ... ... | ... | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... | ... | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... | ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... | ... | 0 | 4 | 0 |
| 32. | மகிஷாபஞ்சகம் ... ... | ... | 0 | 8 | 0 |
| [illegible] | வேளிர்வரலாறு ... ... | ... | 0 | 8 | 0 |
| [illegible] | [illegible]கப்பொருள்விளக்கம் ... ... | ... | 1 | 4 | 0 |
| [illegible] | திருமந்திர நூறுபாட்டுக்குரை | ... | | | |
| [illegible] | உவமானசங்கிரகம் ... ... | ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... | ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... | ... | 0 | 2 | 0 |
| | *பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | | 1 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | [illegible] |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | [illegible] |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | [illegible] |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ௸ ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 32 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகு[illegible] இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் [illegible] மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 1[illegible]க்கு [illegible] கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்[illegible] வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்[illegible] கொடுக்கப்படும்.